

ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14.


Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் ... (1-6-66) இதழ் 114

வைகாசி 19 ஸபர் 11 புதன்கிழமை




ராஜ பீடி கம்பெனி கொழும்பு 14


# யாழ். ஜவுளிவர்த்தகர் ஹர்த்தால் யோசனை

## விலைக் கட்டுப்பாட்டை எதிர்த்து நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

**இன்றுமுதல் அமுலுக்கு வரவிருக்கும் ஜவுளிவிலைக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை எதிர்த்து யாழ்ப்பாண நகரிலுள்ள ஜவுளி வர்த்தகர்கள் இன்று ஒருநாள் ஹர்த்தால் அனுஷ்டிப்பது பற்றி ஆலோசனைசெய்துவருகின்றனர். விலைக்கட்டுப்பாட்டுத் திட்ட அமுல்பற்றி பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளைத் தவிர தங்களுக்கு வேறு எவ்வித தகவலும் கிடைக்கவில்லையென ஒரு பிரபல வர்த்தகர் தெரிவித்தார்.**

ஜவுளி வர்த்தகர்கள் அனைவரும் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் கூடி விலைக்கட்டுப்பாட்டுத் திட்டம் பற்றியும் தங்களை அது எவ்வாறு பாதிக்கும் என்பதுபற்றியும் ஆலோசனை செய்தனர். இன்று ஒருநாள் ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுமென்ற யோசனையைப் பலரும் தெரிவித்தனர். ஹர்த்தால் அனுஷ்டிப்பதானல் கூட்டுறவுமொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் ஜவுளிகளை விற்பனை செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஆறு ஜவுளிக்கடைகளும் பாதிக்கப்படக் கூடுமென்று மற்றும் பலர் யோசனை கூறினர்.

500 ரூபாய் பெறுமதியான காஞ்சிபுரம், மணிப்புரி போன்ற சேலைகளை சேலை ஒன்று பத்தொன்பதரை ரூபாயாக விற்பனை செய்வதென்பது முடியாத காரியமென்றும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இங்குள்ள விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி காரியாலயத்தில், புதிய கட்டுப்பாட்டுத் திட்ட அமுல் பற்றிக் கேட்டபோது தங்களுக்கு உத்தியோகபூர்வமாக எவ்வித அறிவித்தலும் கிடைக்கவில்லையென்று தெரிவித்தனர்.

## இலங்கை வானொலியில் இந்திய திரைஇசை தொடர்ந்து ஒலிபரப்பாகும்

கொழும்பு, செவ்வாய்

இலங்கை வானொலியில் தமிழ், இந்தி இசைத்தட்டுகள் தொடர்ந்து ஒலிபரப்பப்படும்.

இந்தியதிரைப்படஇசைத்தட்டுக்களை இலங்கை வானொலியில் ஒலிபரப்புவதற்குரிய கட்டணத்தைச் செலுத்துவதற்கு இலங்கை வானொலி நிலையம் மறுத்ததைத் தொடர்ந்து, இந்திய திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் இசைத்தட்டுகள் ஒலிபரப்பப்படுவதை ஜூன் முதலாம் திகதிமுதல் தடைசெய்ய முடிவு செய்திருந்தது.

இலங்கை வானொலியைச் சேர்ந்த அதிகாரியொருவர் வர்த்தக ஒலிபரப்பில் எந்த ஒரு நிகழ்ச்சியும் மாற்றப்படவில்லையென்றும் வழக்கம்போல நிகழ்ச்சிகள் நடைபெறுமென்றும் கூறினார்.

திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் தடைவிதித்திருந்தபோதிலும், இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தொடர்ந்து இசைத்தட்டுகளை அனுப்புவதோடு இலங்கை வானொலி நிலையத்துடன் விளம்பர ஒப்பந்

(8-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அசைஸ் விசாரணை

## பலாலி கொலை வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

பலாலி கொலைவழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதியரசர் உரைநிகழ்த்தியபின் ஜூரி சபையினர் சுமார் 15 நிமிடங்கள் தனிமையில் மந்திராலோசனை செய்தபின், எதிரி குற்றவாளியல்லவென ஏகமனதாகத் தெரிவித்தனர். இம் முடிவை ஏற்றுக் கொண்ட நீதியரசர் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு ஜூன் 23-ம் திகதி பலாலியில் இராசையா என்பவர் பொன்னர் எல்லுப்பொலையை கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. தங்கராசா நியமிக்கப்பட்டிருந்தார்.

அசைஸ் விசாரணை மீண்டும் ஜூன்மாதம் 3-ம் திகதி காலை ஆரம்பமாகும்.

## "துரையப்பாவின் கூற்று முழுப்பொய்"

—மந்திரி திருச்செல்வம்

## "என் முக்கிய குற்றச்சாட்டை மறுக்கவில்லையே"

— திரு. துரையப்பா

கொழும்பு, செவ்.

யாழ்ப்பாணம் மாநகர சபை கலைக்கப்பட்டதற்கு "பழிவாங்கும் அரசியல் நோக்கம்" என்று முன்னாள் மேயர் திரு. அ. த துரையப்பா கூறியிருப்பது 'அப்பட்டமான பொய்" என்று ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் இன்று தெரிவித்தார்.

மாநகரசபை கலைக்கப்பட்டது சம்பந்தமாக திரு. துரையப்பா தெரிவித்த கருத்துக்கு மந்திரி திருச்செல்வம் இன்று மறுப்புத் தெரிவித்தார், திரு. துரையப்பா இன்று மீண்டும் மந்திரி மீது குற்றம் சுமத்தினர்.

### மந்திரி மறுப்பு

மந்திரி திருச்செல்வம் இன்று காலையில் பின்வருமாறு தெரிவித்தார்.

மாநகரசபை கலைக்கப்பட்டது அரசியல் பழிவாங்கும் நோக்கத்தைக் கொண்டது என்ற துரையப்பாவின் குற்றச்சாட்டு, "அப்பட்டமான முழுப்பொய்."

### பிரதமருடன்

ஆலோசித்தேன்

மாநகரசபையைக் கலைப்பதற்கு முன்னர் பிரதமருடனும் மந்திரிசபையின் இதர அங்கத்தவர்களுடனும் ஆலோசனை செய்தேன் பிரதமருக்குத்தாமும்இதர அங்கத்தவர்களும் சேர்ந்து பொதுவரவேற்பளிக்கவிருந்ததைத் தடுக்குமுகமாகவே மாநகர சபையை மந்திரி கலைத்தார் என்று திரு. அல்பிரெட் துரையப்பா புகார் கூறியது பற்றி மந்திரி திருச்செல்வம் குறிப்பிடுகையில் பின்வருமாறு சொன்னர்.

### அமோக வரவேற்பு அளிப்பார்கள்

திரு. துரையப்பாவின் கூற்று உண்மைக்கு முற்றிலும் முரணனது. பிரதமர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் பொழுது அங்கு அவருக்கு அமோக வரவேற்புக்கிடைக்கும்.

## '3-ந் திகதி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வேன்"

—திரு துரையப்பா

யாழ்ப்பாண மாநகரசபை கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து ஜூன்மாதம் 3-ம் திகதி வெள்ளிக்கிழமை சுப்ரீம்கோர்ட்டில் தாம்வழக்கு தாக்கல் செய்யப்போவதாக கலைக்கப்பட்ட மாநகரசபையின் மேயர் திரு. அ. துரையப்பா இன்று காலை தெரிவித்தார்.

கொழும்பில் இப்போது தங்கியுள்ள திரு. துரையப்பா, நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கான ஆட்சேபமனுவை தமது வழக்கறிஞர்கள் தயாரித்துவருவதாகவும் தெரிவித்தார்.

"மாநகரசபைகலைக்கப்பட்டதற்கு அரசியல்நோக்கமே காரணமென்றும் நிர்வாகத் திறமையின்மைக்கு மந்திரி காரணம்காட்டவில்லையென்றும் நான் சுமத்திய இரண்டு முக்கிய குற்றச்சாட்டுகளுக்கு மந்திரி பதிலளிக்கவில்லை

### தமிழரசுமேயர்

தமிழரசுக்கட்சியின் மேயர் நீக்கப்பட்ட காலத்திலிருந்து மாநகரசபையில் தமிழரசுக்கட்சி நிர்வாகத்தை ஏற்படுத்த நீதிமன்ற

(8-ம் பக்கம் பார்க்க)

## 5-வது தற்கொலை

சைகோன், மே 31

17 வயதான பௌத்த பெண் ஒருத்தி தென்வியட்னமில் இன்று தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்டார். பிரதமர் கீ அரசாங்கத்தை எதிர்த்து நடைபெற்ற தற்கொலைகளில் இது ஐந்தாவது ஆகும்.

அளவெட்டி

### கும்பிளாவளைப்பிள்ளையார் கோவில்

## பூங்காவனத் திருவிழா

எதிர்வரும் 22-ந் திகதி (4-6-66) சனிக்கிழமை பகல் அபிடேக வைபவத்துடனும், மேள, நடன இன்னிசைகளுடனும் பூங்காவனக்கால் கோள்விழா நடைபெறும். இரவு 11 மணவறைகளும், 8 சிகரங்களும், மின்சார தீபங்களும் வீதியை அலங்கரிக்க விநாயகப்பெருமான் பூஞ்சப்பறத்தில் பவனிவருவார்.

450 12-ந் திருவிழா உபயகாரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

மனேஜர்

யாழ்ப்பாணத்தில் உள்ள விவசாய வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு மனேஜர் உடனடியாகத் தேவை. விண்ணப்பதாரர் கல்வி பொதுத்தராதரப் பத்திரமுடையவராகவேனும் அன்றி கனிஷ்ட தராதரப் பத்திரத்துடன் விவசாய பயிற்சிப் பாடசாலைப் பத்திரத் தகுதியுமுடையவராக இருக்கவேண்டும். வயது 30—35. உடனடியாக, விளம்பர இல: 515, ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 515

சமயலறை உதவியாளர்...

சமையலறை உதவியாளர். தோட்டவேலை செய்யும் பையன்கள், அறைப் பணிப் பையன்கள் உடனே தேவை. புளூறிபன் ஹோட்டல், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 400

## தேவை

சேலைகளுக்கு குஞ்சம் (டசல்ஸ்) இணைப்பதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும்.

**S. R. S.**

**நெசவு நிலையம்**

212, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்

## நிச்சய வெற்றி

பரீட்சைக்கான வழிகாட்டும் குறிப்புகளுடன் உயர்தரத் தமிழ், அரசியல் புவியியல் இலங்கைச் சரித்திரம், இந்திய சரித்திரம், ஐரோப்பிய சரித்திரம் ஆகியவற்றில் நிச்சயவெற்றி அடையலாம்! ஒவ்வோர் பாடத்திற்கும் ரூபா 10/-

ஐக்கிய கலாசாலை

நெல்லிடி, கரவெட்டி.

## தேவை

சீமெண்ட் வெற்றுப்பைகள்

சீமெண்ட் வெற்றுப் பைக்கெற்றுகள் தேவை. மில்க்வைற் தொழிற்சாலை, 527, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 509

## விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம் அன்னசத்திர ஒழுங்கையில் 14 கமானியார் வளவில் நான்கு (4) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மேற்படி விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 503

## கல்வி

வகுப்புகள்

யாழ்ப்பாணக் கல்விநிலையம் யாழ்ப்பாண வைத்திய சாலை வீதியிலுள்ள 304/3 இலக்கக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. எதிரே வரும் யூன்மாதம் முதலாம் தேதி எல்லா வகுப்புகளும் ஆரம்பமாகும் அவ்வவ் வகுப்புகளுக்குரிய கலை, விஞ்ஞானம் முதலிய எல்லாப் பாடங்களும் தனி முறையிலும் வகுப்பு முறையிலும் கற்பிக்கப்படும். விஞ்ஞான பாடங்களுக்குரிய செய்கை முறைப் பயிற்சியும் (Practical classes) அளிக்கப்படும். சோ. இளமுருகனர். 506

வகுப்புகள்

ஜி. சி. ஈ. உயர்தரம் கலை/விஞ்ஞானம் வகுப்புக்கள் திறமைவாய்ந்த ஆசிரியர்களால் நடாத்தப்படும். ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 514

## SALE

BOOK

For sale. Latest edition (Fourteenth) Savills system of Clinical Medicine by E. C. Warner. Bharani Pharmacy, Hospital Road, Jaffna. 516


திங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை)

விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடோர்ன் (பதுளை)

தீவொளி (நுவெரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி

நம்பியார், அசோகன், நாகேஷ்

பண்டரிபாய், சகஸ்ரநாமம்

மற்றும் பலர் நடித்த

சத்தியாமூவீஸ்

**தெய்வத்தாய்**


## வியட்நும் விவகாரம்

### யு. எஸ். தூதருடன் டட்லி ஆலோசனை

கொழும்பு, செவ்.

வியட்னும் விவகாரத்தில் இலங்கை அதிகாரப் பூர்வமாக நேற்று தலையிட்டது பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகா நேற்று ஒரு விசேஷ அறிக்கையை வெளியிட்டார்

இலங்கையிலுள்ள அமெரிக்கதூதர் திரு சிசில் பிலயனை நேற்று அழைத்து பிரதம மந்திரி ஆலோசனைகள் நடத்தினுர் வியட்னுமில் தற்போது உருவாகியுள்ள நிலைமை குறித்து இலங்கை பெரிதும் கவலைகொண்டிருப்பதாகவும் பௌத்தபிக்குகளுக்கும், பிக்குணிகளுக்கும் இழைக்கப்படும் அநீதிகள் குறித்தும் பௌத்த ஆலயங்கள் தகர்க்கப்படுவது குறித்தும் வருந்துவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். இந்த விஷயத்தில் சுமுகமான ஒரு முடிவுக்கு வருவதற்கு தமது செல்வாக்கை உபயோகித்து தமது நாட்டுடன் தொடர்பு கொள்ளும்படியும் அமெரிக்க தூதரைப் பிரதமர் கேட்டிருக்கின்ருர்

—

## 'இளைஞருக்கு நல்ல வாய்ப்பு'

மொரட்டுவா, செவ்.

'இப்பொழுது இளைஞர்ளுக்கு நல்ல வாய்ப்புக்கள் இருக்கிறது. இலவசக்கல்வி அவர்களது நல்வாழ்வுக்கு எவ்வளவோ துணைபுரிகிறது கல்வியற்ற ஒருவன் மிருகத்துக்குச் சமமானவன்'

இவ்வாறு நீதியரசர் திரு. டி. எஸ். பெர்ணுண்டோ மொரட்டுவா இளைஞர்முன்னேற்றச் சங்கத்தின் 11வது வருடாந்த விழாவுக்கு பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

திரு. பெர்ணுண்டோ மேலும் பேசுகையில், சமூகத்தொண்டு மிகவும் சிறந்த தொரு பணி என்றும் இதை எல்லோம் பின்நிற்காது செய்ய முன்வரவேண்டுமென்றும் கூறினர்.

—

## மீன்பிடிவலை திருட்டு

### மூவர் கைது

யாழ்ப்பாணம், செவ்

கரையூரில் ஒரு வீட்டில் களவு போனதாகக் கருதப்படும் 30 மீன்பிடி வலைகள் கரையூர் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுஇது சம்பந்தமாக விக்ரர், லோறன்ஸ், அந்தோனிப்பிள்ளை, ஆகிய மூவரும் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்டவலைகள் சுமார் 2000 ரூபா என மதிக்கப்பட்டுள்ளது

(ந நி)


**ராஜா**

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போயா தினங்களில் 4 காட்சிகள்

எஸ்.எஸ்.ஆர். - விஜயகுமாரி

நடித்த

**நானும் ஒரு பெண்**

**நியூ காலிங்கன்**

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

முத்துராமன் - சந்திரகாந்தா

நடித்த

**தெய்வத்திருமகள்**

REGAL—JAFFNA

NOW SHOWING!

Michael Gough – Virginia Grey

in

BLACK ZOO

(Bloodcurdling color-Panavision)

(ADULTS ONLY)


# விளம்பரம்

## தேவை

### யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வரையுள்ளது),

பதவி: மனேஜர்.

தகுதி

(1) பொ. த. ப. சித்தியுடன் வியாபாரத் துறையில் 10 வருட அனுபவமுடையவர். அல்லது ஒரு பட்டதாரி வியாபார அனுபவத்துடன். கூட்டுறவுக் கலாசாலையில் விசேஷ பயிற்சிவகுப்பில் சித்தியுடையவர்க்கு விசேஷ சலுகை.

(2) வயது (1-6-66-ல்) 30 முதல் 45 வரை.

சம்பளம் 250——500 / 10 X 15/- — 5 X 20/-

சமாசத்திற்குரிய படிகளும் கொடுபடும். அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

பிணை

ரொக்கம் ரூபா 3000/- அத்துடன் ஆதனம் ரூபா 7000/- நியமனம் ஒரு வருட காலத்திற்குதகைமை காண் காலமாக இருக்கும்.

விண்ணப்பங்கள் 15-6-66-க்கு முன்பதாக பதிவுத் தபால்மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பப் படல்வேண்டும்.

காரியதரிசி,
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்.

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 456

## தேவை

கீழ் குறிக்கப்படும் பதவிகளுக்கு யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவு சங்கங்களின் சமாசம் விண்ணப்பம் கோருகின்றது. தகைமையுடையோர் 20-6-66க்கு முன் பதிவுத்தபால் மூலம்''கௌரவ காரியதரிசி அவர்களுக்கு, யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவு சங்கங்களின் சமாசம், 10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பிப்போர் பதிவுத்தபாலின் மேல்உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் தன்மையைக் குறிக்கவும்,

உதவி மனேஜர் பதவி

விண்ணப்பதாரர் ஆங்கிலம் அல்லது தமிழ் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் தமிழ், ஆங்கிலம், எண்கணிதம் அல்லது கணிதம் (மூன்று பாடங்களில்) திறமைச் சித்தியும், கூட்டுறவுக் கலாசாலைபயிற்சி, தட்டெழுத்து, வர்த்தககணிதம் ஆகியவற்றில் அறிவும், இப்பதவி அனுபவமும்விரும்பத்தக்கது வயது: 25க்குக் கீழ்ப்படாமலும் 40க்குமேற்படாமலும் இருத்தல்வேண்டும். பிணை: உரொக்கம்ரூபா 2000/-மும் ஆதனப்பிணை ரூபா 5000/-மும்.

சம்பளம் 125/- — 200/- / 7-50 × 10

அலவன்ஸ் 33 3/1%

விற்பனையாளர்கள்

(பெண்கள் மாத்திரம்)

விண்ணப்பதாரர் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராயும், 21வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராயும் இருத்தல் வேண்டும். நெசவு அனுபவம் விரும்பத்தக்கது. பிணை உரொக்கம் 500/-

சம்பளம் 70/-— 100/- / 2-50 × 12

அலவன்ஸ் 33 3/1%

(ஒப்பம்) து. சீனிவாசகம்.
கௌரவகாரியதரிசி
443

## இரதோற்சவம்

வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் கோயில்-நிகழும் பராபவ ஆண்டு வைகாசித்திங்கள் 20-ம் நாள் (2-6-66) வியாழக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை விசேஷ ஸ்நபனுபிஷேகமும் ஆராதனையும் அதைத் தொடர்ந்து வசந்தமண்டப பூசையும் நடைபெற்றுவிநாயகப்பெருமான் கொடி, குடை. ஆலவட்டம் முதலிய விருதுகளுடனும் சிறந்த மங்கள வாத்தியங்களுடனும், புஷ்பமாரியுடனும் திருவீதிவலம் வந்து தேரில் ஆரோகணித்தருளுவார் அன்பர்கள் அபிஷேகத்திற்குத் தேவையான பால், தயிர். இளநீர், பன்னீர் முதலிய திரவியங்களையும், தேரடியில் அடிக்கத் தேங்காயும் உதவுவார்களாக. அன்று 778,779,780 பஸ்களின் விசேஷ சேவைக்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

தேர்த்திருவிழா
உபயகாரர்.

455

## பிரதேசக் கலைமன்றம்

யாழ்ப்பாணம்

### கலைவிழா

ஆகஸ்டு 26—29-1966
(26-8-66 -29:8-66

நிகழ்ச்சிகள்:

பகல்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஓவியம், சிற்பம், ஆபரணம், புகைப்படம், கைப்பணி, நெசவு, தையல், சிற்பிவேலைகள்பரம்பரைக் கைத்தொழில், சமையற்கலை, பாவைகள் ஆகியவற்றின் காட்சி.

இரவு: யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் சங்கீதம், நடனம், நாடகம் ஆகியன.

சகல விபரங்களுக்கும் கீழ்க்காணும் பொருத்தமான உபகுழுவின் தலைவருக்கோ அல்லது காரியதரிசிக்கோ எழுதவும்.

சங்கீதம்: திரு. எஸ் பரம்தில்லைராஜா, 146, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சங்கித உபகுழுவின் காரியதரிசி)

நடனம்: திரு. என். சிவசிதம்பரம், A. A; சமூக சேவைப் பகுதிகச்சேரி, யாழ்ப்பாணம் (நடனஉபகுழுவின் தலைவர்)

நாடகம்: திரு. இ. க. குமரையா, கச்சேரி, யாழ்ப்பாணம். (நாடக உபகுழுவின் காரியதரிசி)

கைப்பணி: திரு. எஸ். கந்தவனம், மாவட்ட அதிகாரி, கிராம அபிவிருத்தி, சிறுகைத்தொழிற் பகுதி, கச்சேரி, யாழ்ப்பாணம். (கைப்பணி உபகுழுவின்தலைவர்)

ஓவியம், சிற்பம், புகைப்படம்: திரு. எஸ். யூ. சோமசேகரம், இளைப்பாறிய உதவி வித்தியாதிபதி, 43, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம், (ஓவியம், சிற்பம், ஆகிய உபகுழுவின் தலைவர்)

செ சிவஞானம்
யாழ்ப்பாண மாவட்ட பிரதேசக் கலைமன்றப் பொதுக்காரியதரிசியும், யாழ்ப்பாணக் காரியாதிகாரியும்.

காரியாதிகாரியின் அலுவலகம், யாழ்ப்பாணம்,
20-5-66. 485

THE JAFFNA ACADEMY
Chundicully

Special Revision Classes for G. C. E. ordinary level August 1966 Examination starts on 1-6-1966. Apply immediately

453 Director.

**வியாபாரம் பெருக**

**விளம்பரம் செய்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷிய - மலேஸிய பேச்சுக்களில் அற்புத முன்னேற்றம்?

## சரவாக், சபாவில் வாக்கு கணிப்பு இல்லையாம்

### துருப்பு விலக்கமும், ராஜிய உறவும் இடம்பெறும்

### சமாதானத் திட்டம் இன்று வெளியாகும்

பாங்காக், மே 31

பாங்காக்கில் நடைபெற்றுவரும் இந்தோனேஷிய— மலேஷிய பேச்சுக்கள் நல்லமுன்னேற்றம் கண்டிருப்பதாகவும், இரு நாட்டுப் பிரதிநிதிகளும் இது குறித்து மகிழ்சியுற்றிருப்பதாயும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

மலேஸிய துணைப் பிரதமர் துன் அப்துல் ரஸாக்கும், இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் ஆதம் மாலிக்கும் நேற்று இருதடவை கூட்டம் நடத்தினார்கள்.

பிரதான பிரச்னை எதுவும் இருவருக்குமிடையே அப்போது தோன்றவில்லை எனக் கூறப்பட்டது.

நாளை இறுதி அறிக்கை வெளியாகும் என்றும், இரு தேச அதிகாரிகளும் ஏற்கனவே அதைத் தயாரிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்றும் மேலும் கூறப்படுகிறது.

சரவாக், சபா ஆகிய பிரதேசங்கள் பற்றி இந்தோனேஷியாவுக்கு திருப்தி ஏற்பட்டிருக்கிறதென்றும், மலேஸியாவில் அது சேர்ந்திருக்கவேண்டுமா என்பது குறித்து அங்கு வாக்குக் கணிப்பு இருக்காது என்றும் அறிவிக்கப்படுகிறது.

இனி, துருப்புக்களை விலக்கிக்கொள்ளுவதும், எல்லைச் சம்பவங்களை முடிப்பதும், ராஜிய உறவை ஆரம்பிப்பதுமே வேலையாக இருக்கும் எனக் கூறப்பட்டது.

மலேஸியாவை நசுக்கும் இந்தோனேஷியக்கொள்கை அநேகமாக முடிவடைந்தது என்றும், துருப்பு விலக்கமே இனி தேவை என்றும் தாய்லாந்து வெளிவிவகார அதிகாரி ஒருவர் கூறினார்.

நாளை இரு நாட்டு மந்திரிகளும் தாயகம் புறப்படுமுன் சமாதானத்திட்டம் வெளியிடப்படும்

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து தாம் உரிய சமயத்தில் அறிவிப்பதாயும் இப்போது ஒன்றும் பேசாமல் மௌனமாக இருக்கப்போவதாயும் இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோ அறிவித்தார்.

---

## அமெரிக்க ராக்கெட் சந்திரனில் இறங்கும்?

கேப்கென்னடி, மே 31

சந்திரனில் மெதுவாக இறங்கும் பொருட்டு அமெரிக்கா நேற்றிரவு ஒரு ராக்கெட்டைச் செலுத்தியது. 63 மணி நேரத்தில் இறங்கும் என எதிர்பார்க்கப்படும் இந்த ராக்கெட், இப்போது நிலவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

வெகு நுட்பமாக இது செலுத்தப்பட்டது என்றும், அதன் பாதையை ஒரு சிறு அளவு சரிப்படுத்த வேண்டியிருக்கும் என்றும் விஞ்ஞானிகள் கூறினர். சுழல் கமராக்களைக் கொண்ட இந்த ராக்கெட் கிரகம், இதுவரை அனுப்பப்பட்டதைவிட வெகு நுட்பமான கருவிகளைக் கொண்டது எனக் கூறப்பட்டது. சந்திரனின் மேல்பரப்பை இது படம் பிடித்து அனுப்பும்.

---

## அடுத்தடுத்து தீ விபத்தும், ரயில், பஸ் விபத்துக்களும்

### இந்தியாவில் நடக்கும் அதிசயம்

புதுடில்லி, மே 31

இந்தியாவில் ரயில் விபத்துகளும், பஸ்விபத்துகளும், தீ விபத்துகளும் அடுத்தடுத்துப் பரவலாக ஏற்பட்டு வருவது, ஊழிக்காலமோ என்ற அதிசயத்தை விளைவித்திருக்கிறது.

உத்தர பிரதேசத்தில் நேற்று பஸ் ஒன்று 100 அடி பள்ளத்தில் பாய்ந்ததால் 38 பேர் கொல்லப்பட்டனர். ஒரு சிறுவன் மட்டும் உயிர் தப்பினன்.

கல்கத்தாவில் ஏற்பட்ட மற்றோர் பஸ்விபத்தில் 31 பேர் காயமடைந்தனர். இவர்களில்7 பேரின்நிலைமை அபாயகரமாய் இருக்கிறது.

உத்தர பிரதேசத்தில் நௌஸிடாவில் நேற்று ஏற்பட்ட தீவிபத்தில் 6 பேர் கொல்லப்பட்டனர்.

குண்டுரில் ஏற்பட்ட தீ விபத்தில் 800 வீடுகளும், பல மர, புகையிலைக்கிடங்குகளும் நாசமாகின. ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்தனர். வெவ்வேறு இடங்களில் நேற்று தீவிபத்து ஏற்பட்டது. பலத்த கோடைக் காற்றினல் மாமூல் வாழ்க்கை நிலைகுலைந்துவிட்டது. டெலிபோன், மின்சாரக் கம்பிகள் தீயினல் கருகி விழுந்தன.

நெல்லூர் பகுதியில் 250 குடிசைகள் தீ விபத்துக்கு ஆளாகின.

பீகாரில் புயலுக்கு 12பேர் காயமடைந்தார்கள்.

மற்றோர் இடத்தில் தீ விபத்தில் ஒருவர் மாண்டார். 30 வீடுகள் அழிந்தன.

வேறோர் பகுதியில் தீக்கு 2 வீடுகளும், 60000 ரூபா பணமும் நாசமாகின.

சென்னை ஹௌரா எக்ஸ்பிரஸ் நேற்று தடம்புரண்டதில் 2 பேர் காயமடைந்தனர். 9 பெட்டிகளும் இன்ஜினும் கவிழ்ந்தன.

---

## காரில் உலகைச் சுற்றிவர 40 நாள்

கோலோன் (டாட்), மே31

காரிலேயே உலகை வலம்வர 4 இளைஞர்கள் புறப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகையாளர் குந்தர்மீர்லிங் எபராட்ஹட் என்ற இரு இளைஞர்கள் ஒரு காரில் மேற்குத் திசையிலும், டாக்டர் குந்தர் பிராண்டல், பத்திரிகையாளர் யோகிம் ஸ்பிரிங்கர் என்ற இரு இளைஞர்கள் மற்றொரு காரில் கிழக்குதிசையிலும் சென்று, உலகை 40 நாட்களுக்குள் வலம் வரப் புறப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மொத்தம் 48,000 கிலோ மீட்டர் பயணம் செய்வார்கள். அவசியமான இடங்களில் மட்டும் காருடன் விமானங்களிலும், கப்பல்களிலும் பயணம் செய்வார்கள். இவர்கள் கல்கத்தா, புதுடில்லி வழியாகவும் செல்வார்கள். மே மாத இறுதியில் இவர்கள், கோலோன் திரும்புவார்கள். முதலில் வெற்றிகரமாகத் திரும்புகிறவர்களுக்கு ஒரு பரிசு காத்திருக்கிறது. அது தான் பீப்பாய் நிறைய பீர்!

---

## தற்கொலை போராட்டம் தொடர்ந்து நடக்குமாம்

### வியட்னமில் 4வது பிக்கு தீக்குளிப்பு

வாஷிங்டன், மே 31

'வியட்னமில் தனது கடமைப் பொறுப்புக்களிலிருந்து அமெரிக்கா ஒருபோதும் பின்வாங்காது' என ஜனாதிபதி ஜோன்ஸன், ஆர்லிங்டன் சமாதியில் நடைபெற்ற ஞாபகார்த்த கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

வியட்னமில் நடைபெற்ற கொலைச் சம்பவங்கள் சிவில் அரசாங்கம் ஏற்படுவதைத் தடைசெய்யவே உதவும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் நேற்றிரவு மீண்டும் ஒரு பௌத்த பிக்கு தீக்குளித்தார். கடந்த இரு தினங்களில் இதுவரை இரண்டு பெண்களும், இரண்டு ஆண்களும் தற்கொலை புரிந்திருக்கிறார்கள்.

கீ அரசாங்கம் ராஜினாமாச் செய்யாவிட்டால் தற்கொலைப் போராட்டம் நடைபெறும் என பௌத்த தலைவர்கள் அறிவித்தனர்.

ஹூவேயிலுள்ள அரசாங்கப் படைகள் கட்டளைகளை மீறியதால், அதற்குப் பதிலாக புதிய விஸ்வாசப் படைகளை சைகோன் அரசாங்கம் அனுப்பியிருக்கிறது வியட்காங் யுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

---

## மொபுட்டுவை கொல்ல முயற்சி

லியப்போல்ட்விலி, மே 31

காங்கோ ஜனாதிபதி மொபுட்டுவையும், அவரது ராணுவத் தளபதியையும் கொலைசெய்யவும், அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றதாகவும் முன்னள் பிரதமர் கிம்பா உட்பட 4 முன்னள் மந்திரிகள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சதியில் வெளிநாட்டுத் தூதராலயங்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக மொபுட்டு கூறினார்.

---

## ரயில் விபத்தில் 10 பேர் பலி

கேப்டவுண், மே 31

தென்னபிரிக்காவில் இரு ரயில்கள் மோதிக்கொண்டதன் காரணமாக 10 ஆபிரிக்கர்கள் மாண்டனர். 100க்கு மேலானோர் காயமடைந்தனர்.

---

## அரசியலமைப்புக்கு எண்மர் கமிட்டி

கெய்ரோ, மே 31

ஐக்கிய அராபியக்குடியரசுக்கான புதிய அரசியல் திட்டமொன்றை வகுக்குமுகமாக 8 பேரடங்கிய கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

---

"உலக ஹாக்கியில்

## ஜெர்மனி, ஹாலந்து, பாகிஸ்தான் பெரும் எதிரிகள்"

### இந்திய ஹாக்கி தலைவர் கருத்து

புதுடில்லி, மே 31

1968-ம் ஆண்டு மெக்ஸிக்கோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக்கில் இந்தியா தன் ஹாக்கி, உலகசாம்பியன் பட்டத்தைக் காத்துக் கொள்வதற்கு, ஜெர்மனி, ஹாலந்து, பாகிஸ்தான் ஆகியவை பெரும் சவால் நாடுகளாக விளங்கும்.

ஆனல் சமீபத்தில் ஹாம்பர்க்கில் நடைபெற்ற சர்வதேச போட்டியில் இந்தியா தான் இறுதி வெற்றிபெற்றது.

இதைத் தொடர்ந்து பாங்காக்கில் நடைபெறவிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியா முதல் ஸ்தானத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா, ஹாக்கி விளையாட்டில் தனது பழைய உத்திகளைத் தொடர்ந்து கையாள்வதாலேயே ஹாம்பர்க்கில் வெற்றி பெற்றது என இந்திய ஹாக்கி சம்மேளனத் தலைவர் அஷ்வினி குமார் கூறினர்.

''மேற்கு நாடுகள் கையாளும் முறைகளைக் கொண்டு அவர்களைத் தோற்கடிப்பது முடியாத விஷயம். பாகிஸ்தானும் இந்த முறையையே பின்பற்றுகிறது'' என்றும் அவர் கூறினர்.

''ஜெர்மனி, ஹாலந்துமற்றும் சில ஐரோப்பிய நாடுகள் இப்போது சிறந்த ஹாக்கி நாடுகளாக மாறி வருகின்றன'' என்றும் அவர் தொடர்ந்து கூறினர்.

---

## இஞ்சினைச்சுத்தம் செய்யும்கொட்டை ஓடுகள்

ஸ்டட்கார்ட் (டாட்), மே31

இந்த நவீன தொழில் நுட்ப யுகத்திலும் இயற்கைப் பொருள்களின்றி நாம் சமாளிக்க இயலாது என்பது தெளிவாகிறது. தென்ஜெர்மனியில் மோட்டார் கார் தொழிற்சாலையில் கார் இன்ஜின்களில் 'சிலிண்டர்'களைச் சுத்தம் செய்து மெருகூட்ட அக்ரோட்டு கொட்டைமேல் ஓடுகள் பயன்படுத்தப்படுகின்றன. முதலில் மணலையும் பின்னர் பிளாஸ்டிக் தூளையும் பயன்படுத்திய போது எதிர்பார்த்த பலன் விளையவில்லை. ஆனல் அக்ரோட்டு கொட்டை ஓடுகள் அருமையாகச் சுத்தம் செய்கின்றன.

---

## கார் வாங்கும் தொழிலாளிகள்

ஹாம்பர்க் (டாட்), மே31

மேற்கு ஜெர்மனியில் 1965-ல் விற்பனை செய்யப்பட்ட கார்களில் பெரும் பகுதியை வாங்கியவர்கள் தொழிலாளர்களே! முந்திய ஆண்டில் ஜெர்மனியில் 13,82,829 கார்கள் விற்கப்பட்டன. கடந்த ஆண்டில் 1,61,348 கார்கள் அதிகம் விற்கப்பட்டதில், 1,32,707 கார்களை குமாஸ்தாக்களும் தொழிலாளர்களுமே வாங்கியுள்ளனர்.

---

## சுவர்ண்சிங் பாரிஸ் புறப்பாடு

பம்பாய், மே 31

இந்திய வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் தலைமையில் ஒரு தூது கோஷ்டி நேற்றிரவு பாரிஸ் புறப்பட்டது. பிரெஞ்சுத் தலைவர்களுடன் சர்வதேச விஷயங்கள் பற்றித் திரு. சிங் பேச்சு நடத்துவாரென்றும், வழியில் பிரிட்டிஷ் பிரதமர் வில்ஸன், வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டுவர்ட் ஆகியோருடன் அவர் பேச்சு நடத்துவாரென்றும் அறிவிக்கப்பட்டது.

---

## ரயில்விபத்து

புதுடில்லி, மே 31

சென்னை-ஹௌரா எக்ஸ்பிரஸ் தடம்புரண்டதால் இருவர் காயமடைந்தனர். என்ஜினும், 9 பெட்டிகளும் கவிழ்ந்தன.

---

## கியூபா

ஹவானு, மே 31

கியூபாவுக்கு எதிரான புரட்சிக்காரர்களுக்கு ஆயுதங்களை ஏற்றிச் சென்ற ஆயுதப்படகு ஒன்றைச் சேதப்படுத்தியதாயும், இதனுல் நால்வர் மாண்டு இருவர் காயமடைந்தனர் என்றும் கியூபா அறிவித்தது.

---

## ரொடீஷியாவில் ஆபிரிக்கர் கைது

ஸாலிஸ்பரி, மே 31

ரொடீஷியாவில் ஓர் இளம் வெள்ளை விவசாயியையும், அவரது மனைவியையும் கொலைசெய்தது சம்பந்தமாக ஓர் ஆபிரிக்கர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நமக்கு ஆணவம் இருக்கும்வரையில் இன்பம் இருக்கமுடியாது. உலகத்துடனும் நாம் நட்புறவு கொள்ளமாட்டோம். அதைவிட நமக்கு நண்பர்கள் அதிகரிப்பர். நம் மனம் சுத்தமாகும்போது, நமது விரோதிகளும் நமக்கு நண்பர்களாகிவிடுவர்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

பராபவ ஆண்டு வைகாசி மீ 19 உ (1-6-66)

# அமெரிக்கா வெளியேறட்டும்!

தென் வியட்னாமில் உருவாகிவரும் மோசமான நிலைமையையிட்டு இலங்கைதனது கவலையை அமெரிக்க அரசாங்கத்துக்குத்தெரிவித்துள்ளது. தென்வியட்னாமில்பௌத்தர்களின் உரிமைகளும் பௌத்த ஆலயங்களும் பாது காக்கப்படுமென இலங்கை நம்புவதாக அமெரிக்க அரசாங்கத்துக்கு, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதர் மூலம் பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

தென்வியட்னாமில் இராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து நடத்தும் எதிர்ப்பு இயக்கம் வரவர நிலைமையை மோசமாக்கியுள்ளது. பௌத்த பிக்குகளும் பிக்குணிகளும் தம்மைத் தாமேதீயிட்டு உயிர்த் தியாகம் செய்துள்ளனர்.

வியட்னாமில் அமைதி நிலவவும் உலகசமாதானத்தைப்பேணவும் வியட்னாம் பிரச்னைக்குச் சமாதானத்தீர்வு காண வேண்டியது அவசியமென உலக நாடுகள் பலவும் வற்புறுத்திவந்துள்ளன. எனினும் அங்கு தாக்குதலும்பதில் தாக்குதலும் இன்னும் நிற்கவில்லை. வியட்னாம் பிரச்னையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளதென் வியட்னாம், வடவியட்னாம் தலைவர்களும் வியட்காங் பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசி ஒரு தீர்வு காண்பதே முறையும் சுலபமுமாகும். இதில் அந்நிய தலையீடு இருக்கக்கூடாது. ஆனால் தென்வியட்னாம் மக்கள் விரும்பாவிட்டாலும்கூட தென்வியட்னாம் மக்களை கம்யூனிஸ்டு ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றுவது தனது கடமையென்று அமெரிக்கா அடாப்பிடியாக வியட்னாமில் கால் வைத்துக் கொண்டு நிற்கிறது. அமெரிக்காவின் தலையீட்டையோ. அதன் கைப்பாவையாக உள்ள கீயின் இராணுவ ஆட்சியையோ தென்வியட்னாம் மக்கள் விரும்பவில்லை. அவர்களுக்கு வேண்டியது அமைதி; சமாதான வாழ்வு.

உலக சமாதானமும் அமைதியும் தான் தங்கள் நோக்கமும் கொள்கையும் என்று கூறிக் கொண்டே அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன வல்லரசுகள். கம்யூனிஸ ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காக வியட்னாம் மக்களைப் பலிகொடுக்கும் அமெரிக்காவும் உலகசமாதானமே தனது நோக்குமென்கிறது. "சுதந்திரத்தைப் பாதுகாக்கப்போராடுவதுடன், கௌரவமான சமாதானத்தைத் தொடர்ந்து தேடுவோம்" என்கிறார் அமெரிக்க அதிபர் ஜோன்சன். உண்மையிலேயே அமெரிக்காவுக்கு உலகசமாதானத்தில் விருப்பமிருந்தால் வியட்னாமிலிருந்து அமெரிக்கா வெளியேறிவிட வேண்டும். வியட்னாம் மக்களே தங்கள் பிரச்னைக்குத் தீர்வுகாணட்டும். இல்லையேல் 'கௌரவ'மாகவியட்னாமிலிருந்து வெளியேறி வியட்னாம் விவகாரத்தை அமைதியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புள்ள ஐ. நா. விடம் ஒப்படைத்துவிடட்டும். வியட்னாம்மக்களை விரும்பாதபோது வரட்டுக்கௌரவத்தைப் பார்த்துமுகத்தில் கரிபூசிக் கொள்ளாமல் கௌரவமாக வியட்னாமிலிருந்து வெளியேறுவதுதான் அமெரிக்காசெய்யக்கூடிய மிகச் சிறந்த சமாதானப் பணி.

# பிச்சையெடுக்கும் தொழிலாளர்

தோட்டங்களில் பல்லாண்டுகளாக வேலை செய்த தொழிலாளர், வயோதிபத்தில் வேலையிலிருந்து விலகியபின், தெருக்களில் பிச்சையெடுக்கவேண்டியிருக்கிறதென்றும், இதைத் தடுக்கத் தோட்டநிர்வாகம், வயோதிபருக்குத் தர்ம விடுதிகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டு கொண்டுவரப்பட்ட தீர்மானமொன்று பதுளை மாநகரசபையில் இரு வாக்குகளால் தோல்வியடைந்தது. ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்தவர்கள் இதை எதிர்த்து வாக்களித்தனராம்.

காரணமென்ன? அப்பகுதியிலே தெருவில் பிச்சைக்காரராகத் தவிப்பவர்கள் பெரும்பாலும் இந்திய வம்சாவளியினரே. ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தப்படி அவர்களை இந்தியாவுக்கு அனுப்பிவிடலாமென்றும், தோட்டங்களில் அவர்களுக்குத் தர்மவிடுதி தேவையில்லை என்றும் அவர்கள் கருதுகின்றனர்போலும்! இந்த ஒப்பந்தம் எப்போது அமுலுக்கு வரப்போகிறதென்பது தெரியவில்லை. ஒப்பந்தம் நிறைவேற 15 வருடகாலம் ஆகலாம் என்று சொல்லப்படுகின்றது. இது எப்படியாயினும் உடலில் தெம்புள்ளவரை உழைத்து இந்நாட்டுச் செல்வத்தையும், தோட்டத்துக்கு லாபத்தையும் வளர்த்தவர்களை வயோதிபத்தில் பிச்சைக்காரர்களாகத் தெருவில் தவிக்கவிடுவது எந்த நாகரீக அரசாங்கத்துக்கும் அழகல்ல.

அவர்களுக்குத் தக்க 'பென்ஷன்' திட்டத்தை ஏற்படுத்தியிருப்பின் இப்படி அவர்கள் பிச்சை எடுக்கவேண்டியிராது. சமீபத்தில் தான் 'பிராவிடண்ட் நிதி'த் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. வயோதிபர் பலருக்கு குறைந்த அளவு பணமே கிடைக்கும். ஒருசிலமாத சீவனத்துக்கும் இது போதாது. ஆகவே அவர்களுக்கு இரண்டே வழிதான் உண்டு. ஒன்று, பிச்சையெடுப்பது, மற்றொன்று, தற்கொலை செய்துகொள்வது. உழைத்து உழைத்துத் தேய்ந்துவிட்ட இத்தொழிலாளரை இவ்விதகதிக்கு உள்ளாக்குவது மனிதருக்குச் செய்யும் பெரும் பாபமல்லவா?

வயோதிப தர்மவிடுதிகளை ஏற்படுத்தாவிடில், அவர்கள் நிம்மதியாக வாழ அரசாங்கம் வேறு என்ன செய்யப்போகின்றது? இந்தியாவுக்கு அனுப்புவதாயினும் அவர்களுக்கு சீவனத்துக்கான தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இந்தியாவுக்கு அனுப்புமுன் இங்கு அவர்கள் பிச்சை எடுத்துத்தான் சீவிக்க வேண்டுமா? "இரந்தும் உயிர் வாழவேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என்ற திருவள்ளுவர் வாக்குத்தான் நமக்கு நினைவு வருகிறது.

# மொழி பெயர்ப்பு பிரச்னைகள்

ஆங்கிலச் சொற்களை தமிழில் பெயர்க்கும் பொழுது பலவிதமான இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகவும், வானொலி இன்னொரு விதமாகவும், கதை கட்டுரை எழுதுகிறவர்களும் பாடப்புத்தகங்கள் எழுதுகிறவர்களும் வெவ்வேறுவிதமாகவும், அரசகரும மொழி இலாகா ஒரு தனிப்பட்ட விதமாகவும் சொற்களை மொழி பெயர்த்து மாணவர்களிடத்திலும் பொது மக்களிடத்திலும் ஏகப்பட்ட குழப்பத்தை உண்டுபண்ணி விட்டார்கள். இது சம்பந்தமாக மலாயா தமிழாராய்ச்சி மகாநாட்டில் நாவலர் நெடுஞ்செழியனும், பண்டிதர் கா. பொ. இரத்தினமும் வெளியிட்ட சில கருத்துக் குறிப்புகள் கீழே தரப்படுகின்றன.

தமிழகத்தில் ஆட்சி மொழியாக தமிழை தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ள இந்த சமயத்தில் சூப்பிரின்டென்ட், இன்ஸ்பெக்டர் முதலிய பதவிப் பெயர்களையும் இதர கலைச் சொற்களையும் நல்ல தமிழில் மொழி பெயர்க்க வேண்டியது இந்தத் தலைமுறையைச் சேர்ந்த தமிழறிஞர்களின் கடமையாகும்.

இவர்கள் உருவாக்கும் சொற்கள் தான் இன்னும் நூறாயிரம் ஆண்டுகளுக்கு தமிழில் வழங்கப்படும்.

மொழி பெயர்ப்பில் உள்ள சிக்கல்கள் பலவுண்டு.

ஒரு சமயம் தமிழக சட்ட மன்றத்தில் கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்ட போது "MINOR IRRIGATION" என்பதற்கு சிறு நீர்ப்பாசனத் திட்டம் என்று கூறினார்கள்.

## நாவலர் நெடுஞ்செழியன்

அரசாங்கத்தினால் இருபது பேர்கள் வேலையில் நியமிக்கப்பட்டார்கள் என்பதற்கு அரசாங்கத்தினால் 20 பேர்கள் காயப்படுத்தப்பட்டார்கள் என்றும் அரசாங்கப்பதில்களில் கூறப்பட்டுள்ளது. தாக அவர் தெரிவித்தார்.

இலக்கண வரம்புக்கு உட்பட்டு தமிழ் எழுதப்பட வேண்டும். இலக்கண கட்டுப்பாட்டிற்குள் எழுதப் பட்டதால் தான் அகநானூறு, புறநானூறு போன்ற இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தமிழ் நூல்களைஇப்போது நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

மைக் என்பதை ஒலி பெருக்கி என்று மொழி பெயர்த்திருக்கிறோம். பென்சிலின் என்பதை பென்சிலின் என்றே எழுதுகிறோம். தமிழில் மொழிபெயர்க்க முடியாத சொற்களை அப்படியே தமிழில் எழுதும் போது தமிழ் ஒலிக் குறிப்பு மாறாது எழுத வேண்டும்.

ஆங்கிலேயர்கள் தஞ்சாவூரை டாஞ்சூர் என்றே எழுதினார்கள். தூத்துக்குடியை டுட்டுக்கூரின் என்றே கூறினார்கள்.

தமிழில் தந்தியடிக்க முடியும் என்று ஒரு நண்பர் இந்தக் கருத்தரங்கில் விளக்கினார், இதைக் கேட்க மிக மகிழ்ச்சி உண்டாகிறது.

தமிழ் ஆட்சிமொழியாகும் தமிழ் நாட்டிலேயாவது தமிழில் தந்தியனுப்பும் முறையை ஏற்படுத்த எங்களால் ஆன முயற்சிகளைச் செய்வோம்.

இங்கே கூடியுள்ள தமிழறிஞர்களின் கடமை தமிழில் சிறந்த சொற்களையும் கருத்துக்களையும் உருவாக்குவது. அவற்றைக் கருவிகளாகக் கொண்டு போராட வேண்டியது எங்கள் கடமை.

சிறந்த படைக் கருவிகளை வழங்க வேண்டியது தமிழறிஞர்களின் கடமை. அவற்றைக் கொண்டு களத்தில் இறங்கிப் போராட வேண்டியது எங்கள் வேலை.

## பண்டிதர் கா. பொ. இரத்தினம்

பார்லிமெண்ட் என்பதை இந்தியாவிலும் இலங்கையிலும் பாராளுமன்றம் என்றும், மலேசியாவில் நாடாளும் மன்றம் என்றும் கூறப்படுகிறது. நாடாளுமன்றம் என்பதே சிறப்பாக இருக்கிறது. நல்லதாக இருப்பதை எதையும் நாம் வரவேற்போம். நாட்டை ஆளக்கூடியது நாடாளுமன்றம்; உலகத்திற்கு ஆட்சி மன்றம் ஏற்படும்போது பாராளுமன்றம் என்று கூறலாம்.

பாங்க் என்னும் ஆங்கிலச் சொல்லை இலங்கையில் வங்கி என்றும், தமிழ்நாட்டில் பாங்கு என்றும், மலேசியாவில் பாங்கிஎன்றும்எழுதுகின்றனர். பாங்கன் - பாங்கி - பாங்கியர் என்று வேறு பொருளில் சொற்கள் உள்ளன. அதேபோல் பாங்கு என்பதற்கும் வேறு பொருளுண்டு.

மொழி பெயர்ப்பதிலும் இரண்டு வகையுண்டு; ஒன்று கருத்தை மொழிபெயர்ப்பது; மற்றொன்று மொழி பெயர்ப்பது. தமிழ் மரபையொட்டி மொழிபெயர்ப்பு அமைய வேண்டும்.

# லண்டனில் இறங்கிய விமானம்

லண்டன், மே 31

'ஏர் இந்தியா' விமானம் ஒன்று இன்று லண்டன் விமான நிலையத்தில் அவசரமாக இறங்க வேண்டி நேரிட்டது. 115 பிரயாணிகளைக்கொண்ட இந்த விமானத்தின், ஒரு என்ஜின் தீப்பற்றிக் கொண்டதால் இந்நிலை ஏற்பட்டது. எவருக்கும் காயம் இல்லை. இந்த விமானம் நியூயோர்க் சென்று கொண்டிருந்தது.

# ஈழம் கொண்ட மௌலானா

முன்னொரு காலத்தில் ஈழதேசத்தைக் கைப்பற்றி ஆண்டு வந்த சோழனை 'ஈழம் கொண்ட சோழன்' என்றழைத்தார்களாம். நேற்று முன்தினம் தென்னாட்டிலிருந்து வந்த வேறொரு 'மன்னன்' ஒரே நாளில் ஈழத்து மக்களை 'கத்தியின்றி ரத்தமின்றி' கைப்பற்றி' ஈழம் கொண்ட மௌலானா' என்று புகழ்பெற்றார்.

அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் கோவிலில் அடித்து விலகமுடியாத ஜனக் கூட்டம். கோவிலுக்கு இட்டுச் செல்லும் நான்குதெருக்களிலும் மைல் கணக்கான தேசத்துக்கு கார்களும் சைக்கிள்களும் அடைத்துக் கொண்டன. ஏற்கனவே காருகுறிச்சிஅருணாசலத்தை கேட்டு ரசித்த யாழ்ப்பாண மக்கள் அவருக்குப்பின் 'நாகசுர சக்கரவத்தி'யாக விளங்கும் ஷேக் சின்ன மௌலானா சாகிபுவை பார்ப்பதற்கும் கேட்பதற்கும் குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து கொடிவிட்டு வந்து குவிந்தார்கள். இவர்களில் பெரும்பாலார்-பெண்கள், குழந்தைகள் உட்பட-கச்சேரியை இரவு 10 மணியிலிருந்து அதிகா[illegible] மணிவரை ஆறுதலா[illegible]கார்ந்து அனுபவித்[illegible] மௌலானா சாகிபுவின் திறமையை மட்டுமல்ல யாழ்ப்பாண மக்கள் சங்கித ரசனையில் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

ஸஹானா ராக வர்ணத்துடன் வித்துவான்ஆரம்பித்தபோதே கச்சேரி துள்ளு நடைபோட்டு விறுவிறுப்பாக இருந்தது. இதுபழுத்த வித்துவான்களுடைய ஆற்றல். பேருழைப்பாலும் அனுபவத்தாலும் மற்றவர்களைப் போல திணறி தள்ளாடி ஆரம்பிக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கில்லை. தொடர்ந்து 'ஞான விநாயகனே' 'மோட்சமுகலதா' ஆகியன வாசித்துவிட்டு அரிகாம்போதியை ஆலாபனை செய்து 'வினதாஸுத' கீர்த்தனையை கற்பனை ஸ்வரத்துடன் வாசித்தார். அடுத்த தேவகாந்தாரி ராகாலாபனை கொஞ்சிக்குலவி குழைந்து மக்களை மெய்மறக்கச் செய்தது. முழு கச்சேரியிலும் அந்த ராகமே எனக்கு மிகவும் பிடித்துக்கொண்டது. கல்யாணி ராகமும் 'நிஜதாஸ வரதா' என்ற உருப்படியும் பிரமாதமாயிருந்தன. உருப்படிகளுள் இதுவே என்னை வசீகரித்தது. பிரதான ராகமாக தோடியை எடுத்துக் கொண்டு அதைதாரஸ்தாயி ஷட்ஜமம் முதல் மந்தரஸ்தாயி பஞ்சமம் வரை வியக்கத்தக்கமுறையில் அற்புதமாக அள்ளிவிளங்கினார். திருவாவடுதுறை தோடியின் சாயல் அதில் அடிக்கடி பளிச்சிட்டது. சாபு தாளத்தில் பல்லவி அமைந்திருந்தது.

மௌலானாவுடன் சேர்ந்து வாசித்த மஸ்தான் சாகிபு வித்வானுடைய கற்பனைக்கு இடையூறில்லாமல் அளவற்ற ஞானத்தோடும் அனுசரணையோடும் வாசித்து ஜோடி நாகசுரம் எப்படி இருக்கவேண்டுமென்பதற்கு லட்சியமாக விளங்கினார். மாறி மாறி இருவரும் ஸ்வரம் வாசித்தபோது யார் எவர் என்று மயக்கம் உண்டாகிற்று. நாதத்திலும்இனிமையிலும் அத்தனை ஒற்றுமை!

தவில் வாசித்த யாழ்ப்பாணத்து வித்துவான்கள் தட்சணாமூர்த்தியும் சின்னராசாவும் கணேசனும் அடக்கமாகவும் ஒழுங்காகவும் வாசித்து ரஸிகர்களின் பாராட்டைப் பெற்றனர். தவில் சமா சற்றே நீண்டுவிட்டதோ!

(4-ம் கலம் பார்க்க)

((5-ம் கலத் தொடர்ச்சி)

சின்ன மௌலானா போன ஆடிவேல் விழாவில் வாசித்ததையும் வானொலியில் கேட்டேன். என்னவே அதைப்போல நேற்றைய கச்சேரி அமையவில்லைஎன்று என்மனதில் பட்டது. இதை ஒரு குறையாக நான்காட்டவில்லை. ஒரு கச்சேரி முழுச் சோபை அடைவது வித்வானின் உடல்நிலை, மனநிலை, சூழ்நிலை என்று பல விஷயங்களில் தங்கியிருக்கிறது. சங்கீத தேவதையை எளிதில் வசியப் படுத்த எவராலும் முடியாது.

— லாவண்யம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிதண்ணீரின்றி கஷ்டப்படுகின்றனர்

உடுப்பிட்டி, திங்கள்

துன்னாலை தெற்கில் வசிக்கும் சுமார் 500 குடும்பத்தைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழர்கள் குடிதண்ணீரின்றிக் கஷ்டப்படுகின்றார்கள். இவர்கள் இதுவரை கலிகைகந்தசுவாமி கோவிலுக்குச் சொந்தமான கிணற்றில்தான் குடிநீர் பெற்றுவந்தார்கள். சாதி வேறுபாடு காரணமாக அக்கிணற்றுள் நத்சுச்திராவகமும், அழுக்குப் பொருட்களும் போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது இக்குடிநீர்க் கிணறு பாதிக்கப்பட்டுள்ளதால் மேற்படி கிராம மக்கள் தண்ணீரின்றிக் கஷ்டப்படுவதாக துன்னாலை சமாதான சபைக்காரியதரிசி திரு. எஸ். செல்லையா வடமராட்சிப் பகுதி காரியாதிகாரி, பருத்தித்துறைப் பொலிஸ் அதிகாரி ஆகியோருக்கு உதவிகோரி, முறைப்பாடு கொடுத்ததின் பேரில் அதிகாரிகள் குறிப்பிட்ட கிணறைப் பார்வையிட்டு மேற்கொண்டு உதவி செய்வதாக வாக்குறுதியளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது

---

## வாலிபர் படுகொலை

ஹென்வல, செவ்.

கிரிண்டிவல பொலிஸ் பகுதியைச் சேர்ந்த மலிவலனவில் 21 வயதான ஜினதாசா என்பவர் படுகொலை செய்யப்பட்டார். அவரது சடலம் ஓர் வயலில் கண்டு பிடிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## இசைவிழா
### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் நுண்கலைக் கழகத்தின் இசை விழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் இன்று யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோவில் முன்னிலையில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரப்பந்தலில் நடைபெற்று வரும் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்வருமாறு: 5-00 மேளம்: திரு பழனிவெல் கோஷ்டியார், 6-15 சங்கீதபூஷணம் திரு என் ராஜு பாட்டு. 7-30 செல்வி ஞானம்பிகை முருகேசம்பிள்ளை வயலின், 8-30 தலைமையுரை: திரு ஜி ஜி பொன்னம்பலம், 8-45 திருமதி பூமணி இராசரத்தினம் பாட்டு, 10-00 சங்கீதபூஷணம் திரு என் ஷண்முகரத்தினம்பாட்டு, 11-15, 12-30 வில்லுப் பாட்டு — திருநீலகண்டநாயனர் - முத்தமிழ் வித்துவக்கலைமணி திரு எஸ் வடிவேலு கோஷ்டியார்.

---

## கிராமசபைத் தேர்தல்

இரத்தினபுரி, செவ்.

மாரப்பனை கிராமசபையில் யூ. என். பி. ஐந்து வட்டாரங்களிலும், சுதந்திரக்கட்சி ஐந்து வட்டாரங்களிலும் வெற்றிபெற்றன. மற்றும் எட்டு வட்டாரங்களில் சமசமாஜக் கட்சி 4 இடங்களிலும், கம்யூனிஸ்ட் கட்சி 3 இடங்களிலும், சுயேட்சையாளர் ஒரு வட்டாரத்திலும் வெற்றி பெற்றனர்.

## தீவுப் பகுதியில் திருடர் தொல்லை

ஊர்காவற்றுறை, செவ்.

ஊர்காவற்றுறை-கரம்பன் பகுதிகளில் சமீபகாலமாக திருடர்கள் தொல்லை அதிகரித்து வருகிறது. இது பற்றி ஊர்காவற்றுறைப் பொலிசார் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை மேற்குத் தெருவைச் சேர்ந்த எஸ். எம். இராசநாயகம் வீட்டில் களவாடப்பட்ட கடிகாரமும், வானொலிப் பெட்டியும் ஊர்காவற்றுறைப் பொலிசாரின் நடவடிக்கையால் மீட்கப்பட்டன.

இதுசம்பந்தமாக சந்தேகத்தின்மீது ஒருவரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

ஃ ஃ ஃ

புங்குடுதீவு கிழக்கு வாசியான கார்த்திகேசு கனகம்மாவிற்குச் சொந்தமான நகைகள் திருடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 1700 ரூபா பெறுமதியான நகைகள் களவுபோனமைபற்றி சந்தேகத்தின்பேரில் இருவரை ஊர்காவற்றுறைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

---

## வாடி வீடுகள்பற்றி அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

உள்ளூராட்சி மன்றங்களினால் நடாத்தப்பட்டு வரும் வாடிவீடுகள்பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு, ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு எம் திருச்செல்வம், ஸ்தல ஸ்தாபன கமிஷனர் திரு டபிள்யு ஜெ பெர்னண்டோவைக் கேட்டுள்ளார்.

வாடிவீடுகள் நடாத்துவதில்உள்ள கஷ்டங்கள்பற்றியும், முன்னேற்றத்திற்கான வழிகள்பற்றியும், கமிஷனர் வாடிவீடு பொறுப்பாளர்களுடன் ஆராய்வார்.

# தமிழரசுக்கட்சியின் கல்முனை மகாநாடு
## பிரதமரும் சமுகமளிப்பாரா?

கல்முனை, செவ்வாய்

இலங்கை தமிழரசுக்கட்சியின் தேசிய மகாநாடு அடுத்த மாதம் 23, 24, 25-ந் திகதிகளில் கல்முனையில் நடைபெறவிருப்பதையொட்டி அதற்கான ஏற்பாடுகள் இப்பொழுது துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

கல்முனைபிரதானவீதியில், ''பத்தாவது தேசியமகாநாடு, பிரதான காரியாலயம்'' என்னும் பெயருடன் மகாநாட்டு ஏற்பாடுகளைக் கவனிக்கும்பொருட்டு காரியாலயம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. கல்முனை'டெம்பிள் அவனியு, பாண்டிருப்பு முதலாம் குறிச்சி, மருதமுனை ஆகிய இடங்களில் கிளைக்காரியாலயங்கள் திறக்கப்பட்டுள்ளன.

தேசிய மகாநாட்டுடன் மாதர் முன்னணி மகாநாடு, வாலிபர் முன்னணி மகாநாடு ஆகியவைகளும் நடைபெறவிருக்கின்றன. மாதர் முன்னணி அமைப்பதற்கான முயற்சிகளில் திருமதி அமிர்தலிங்கம் சில தினங்களாக இங்குதங்கியிருந்துஏற்பாடுகள்செய்துவருகின்றார்.

தமிழ்மொழி உபயோகச் சட்டவிதிகள் சரிவர அமுல் நடத்தப்படாததும் மாவட்டசபைகள் பின்போடப்பட்டு வருவதும் வாலிபமுன்னணி மகாநாட்டில் பெரிதுபடுத்தப்படலாமெனக் கூறப்படுகிறது.

கிழக்கு மாகாணத் தென்பகுதிக்கு பிரதமர் வருகை தரவிருந்தார். எனினும் இந்த விஜயம் இப்பொழுது ஒத்திவைக்கப்பட்டிருப்பதால் தமிழரசுக் கட்சியின் தேசியமகாநாட்டு இறுதி நாள் நிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்ளக்கூடிய முறையில் அவரது விஜயம் ஒழுங்குசெய்யப்படக்கூடுமெனக் கூறப்படுகிறது.

# 'இந்திய தொழிலாளருக்கு வயோதிபர் விடுதி வேண்டும்'
## பதுளை மாநகரசபையில் பிரேரணை தோல்வி

பதுளை, செவ்வாய்

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம்பற்றியும் இந்திய தொழிலாளர் சம்பந்தமாகவும், பதுளை மாநகரசபைக் கூட்டத்தில் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

உதவி மேயர் திரு. ஏ. எம், அப்துல் சகிப் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், யு. என். பி. யில் சேர்ந்துகொண்ட முன்னாள் சுதந்திரக்கட்சி மெம்பருக்கும், சமசமாஜகட்சி மெம்பருக்குமிடையே வாக்குவாதம் நடைபெற்றது.

சமசமாஜகட்சியை சேர்ந்த திரு. ஜி. டி. குணசேகரா கூறியதாவது: இலங்கையிலுள்ள தேயிலை, றப்பர் தோட்டங்களில் வேலை செய்த இந்த தொழிலாளர்கள், ஒய்வுபெறும் வயதடைந்ததும், தோட்டத்திலிருந்து வெளியேற்றப் படுகிறார்கள் அப்படி வெளியேற்றப்பட்டவர்கள், பிச்சை எடுத்து பிழைக்க வேண்டிய நிலையிலுள்ளார்கள். ஆதலால் எல்லா தோட்டங்களிலும், வயோதிபர் விடுதி ஏற்படுத்தக் கூடியவகையில் சட்டங்களை திருத்தியமைக்கவேண்டும் என பிரதமமந்திரியை கேட்டுக்கொள்ளும் பிரேரணையை, திரு குணசேகரா கொண்டுவந்தார். திரு. விஜயதாசா சொய்ஸா ஆமோதித்தார்.

ஐக்கியதேசிய கட்சியைச் சேர்ந்த எல்லா அங்கத்தவர்களும், இத் தீர்மானத்தை எதிர்த்தார்கள், முன்னாள் சுதந்திரக்கட்சி அங்கத்தவரொருவரும் இத் தீர்மானத்தை எதிர்த்து பேசியபொழுது, சூடான விவாதம் நடைபெற்றது.

இந்திய தமிழர் தலைவரான திரு. எஸ். தொண்டமான், எல்லாத் தொழிலாளர்களையும் இந்தியாவிற்கு அனுப்புவதற்குப் பதிலாக, அந்தமான் தீவிற்கு அனுப்ப முயற்சித்துவருகிறாரென்றும், சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் தேசிய அரசாங்கத்தினால் அமுல் செய்யப்படாதென்றும், அரசாங்கத்தினால் இப் பிரச்னையை தீர்க்கமுடியாதென்றும், திரு. சொய்சா கூறினர்

சூடான விவாதத்தின்பின் இப் பிரேரணை வாக்குக்கு விடப்பட்டபோது இருவாக்கினால் தோல்வியடைந்தது.

## நடுக்காட்டில் திருட்டுபோன டாக்ஸி

பக்கலை, செவ்வாய்

திருட்டுப்போன 16,000 ரூபா பெறுமதியான டாக்ஸியை சப் இன்ஸ்பெக்டர் பெரேரா, நடுக்காட்டில் கண்டுபிடித்தார் டாக்ஸியின் சில உதிரி பாகங்கள், கோனஉல கருச்சிலும் பம்பலப்பிட்டி கருச்சிலும் கண்டுபிடிக்கப்பட்டது. இது சம்பந்தமாக ஜி. சோமரத்தின என்பவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மட்டக்குளியை சேர்ந்த எ. எல். எம். கானுக்கு சொந்தமான இந்த டாக்ஸியை இம்மாதம் 18-ம் திகதி, மாலை 6 மணிக்கு மூவர் வாடகைக்கு பிடித்து சென்றதாகவும், வழியில், டாக்ஸி சாரதி வின்சன்ட் பெரேராவின் கண்களில் மிளகாய்தூளை வீசிவிட்டு, அவரிடமிருந்து அம்மூவரும் டாக்ஸியை அபகரித்துசென்றதாகவும், இச்சம்பவம்பற்றி கூறப்படுகிறது. இதன்பின் டாக்ஸி சாரதி திருட்டு சம்பந்தமாக, மீகாவத்த பொலிஸாரிடம் புகார் செய்ததாகவும் கூறப்படுபடுகிறது.

சந்தேகநபர் கம்பஹா மாஜிஸ்திரேட் திரு. பி. ஈ. டீ. சில்வா முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார்.


---

## பல்கலைக் கழகத்தில் கஞ்சா பாக்கட்
### விசாரணையின் பின் எதிரி விடுதலை

கண்டி, செவ்வாய்

பேராதனை பல்கலைக் கழகத்திலுள்ள விஜயவர்த்தன மண்டபத்திலுள்ள கருச்சில் ஏராளமான கஞ்சா பக்கட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. பல்கலைக் கழகத்தைசேர்ந்த உத்தியோகத்தர் திரு. ரூபிஜெயவீரா இக் கஞ்சா பக்கட்டுகளை கண்டெடுத்தார்.

இதுசம்பந்தமாக, விஜயவர்த்தன மண்டப சமையல்காரர் ஜி. கே ஜோன் கண்டி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். விசாரணையின் பின சமையல் காரர் விடுதலை செய்யப்பட்டார்.




# ஆசிரியருக்கு கடிதங்கள்

## மாநகரசபை கலைக்கப்பட்டது சரியா, தவறு?

யாழ்ப்பாணம் மாநகர சபை கலைக்கப்பட்டது சரியான நடவடிக்கை என்றே கருதவேண்டும். மேயர் பதவி ஏற்றம் இறக்கங்களிலும், தங்களுக்குச் சாதகமானவர்களுக்கு நியமனங்களும், தங்கள் தங்கள்விருப்பு வெறுப்புக்கேற்ற வட்டார அபிவிருத்தி வேலைகளையும் செய்து வந்தனர். பஸ்நிலையச்சிர்கேட்டையோ, நவீன சந்தை கட்டும் திட்டத்தையோ அவர்கள் நிறைவேற்றவில்லை.

மூவர் விசேஷ கமிஷனின் நிர்வாகத்தில் இப்பொழுது மாநகரசபை விடப்பட்டுள்ளது. சிறந்த பஸ் நிலையத்தை, பொதுமக்களின் வசதியை உத்தேசித்து விரைவில் அமைப்பதுடன் நவீன மார்க்கெட்டையும் கட்டி முடித்துவிட்டு மாநகர சபைத் தேர்தலை நடத்த வேண்டும். ஸ்தல ஸ்தாபன அமைச்சு இதில் அக்கறை கொள்ளவேண்டியது அவசியம்.

எம். இரத்தினம்
யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

## கொழும்புத்துறை வட்டாரம்

யாழ்ப்பாண மாநகரசபை எதிர்பாராத விதமாக கௌரவ உள்ளூராட்சி மந்திரி அவர்களால் கலைக்கப்பட்டுவிட்டது. கடந்த 6 வருட காலத்தில், கொழும்புத்துறை வட்டாரத்தைப் பொறுத்த மட்டில் எதுவித முன்னேற்றமும் செய்யப்படவில்லை என்றே சொல்ல வேண்டும். இப்போது அவ் வட்டாரத்தின் அபிவிருத்தி வேலைகள், மின்சார வேலைகள், விஷேசமாகத் தண்ணீர் விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகள் முடிவு பெறுவதற்கு முன்னர் சபை கலைக்கப்பட்டுவிட்டது.

நான் அங்கத்தவனாக இல்லாவிட்டாலும், ஒரு சாதாரண பிரஜையாக, வரியிறுப்பாளனாக, வாக்காளனாக கொழும்புத்துறை வட்டாரத்திற்குரிய வேலைகளை நியமிக்கப்பட இருக்கும் விஷேச ஆணையாளர் மூலமாகச் செய்வேன் என எனது வட்டார மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மேலும், நான்குறிப்பிட்ட மேற்படி வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு சமீபத்தில் மேயராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. அல்பிரட் த. துரையப்பா மிகவும் உதவியாக இருந்தார். அவர் எனது வட்டாரத்திற்கு செய்த உதவிகளுக்கு எனது வட்டார மக்கள் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வது எனது கடமையாகும்.

எனது வட்டாரம் சம்பந்தமாக எதுவித வேலை இருந்தாலும் என்னைவந்து கண்டால், அதை நிறைவேற்றித்தர ஆயத்தமாக இருக்கின்றேன்.

தம்பு கந்தையா,
முன்னாள் 5-ம் வட்டார உறுப்பினர்

## துரதிர்ஷ்டம்

புதிய மேயர் துரையப்பாவின் துரித நடவடிக்கையால் யாழ்.நகரம் முன்னேறிக்கொண்டு வரும் சமயம் மாநகரசபை கலைக்கப்பட்டது. யாழ். மக்களின் துரதிர்ஷ்டமே கடந்த ஒரு மாதகாலத்தில் மேயர் துரையப்பா பல முன்னேற்றத் திட்டங்களை வகுத்தார். எல்லா வட்டாரங்களின் அபிவிருத்தியிலும் அக்கறை எடுத்தார். முக்கியமாக பஸ் நிலையத்தை பழைய இடத்திற்கு கொண்டுவருவதற்காக நடவடிக்கை எடுத்தார்.

நீச்சல் தடாகம், விளையாட்டு அரங்கு வானொலி அஞ்சல் நிலையம் புதியநகர மண்டபம் ஆகிய பல விஷயங்களுக்காக மேயர் நடவடிக்கை எடுத்தார்.

துரையப்பாவின் நிர்வாக காலத்தில் பொருமை கொண்ட சிலரின் தூண்டுதலினாலே மாநகரசபை கலைக்கப்பட்டது. அடுத்த தேர்தலில் வரியிறுப்பாளர்கள் நல்ல தீர்ப்பளிப்பார்கள்.

விளையாட்டு அரங்கிற்கு துரையப்பா ஸ்ரேடியம் என பெயர் சூட்டப்பட்ட தீர்மானத்தை பெரும்பான்மை பொதுமக்கள் ஏற்றுள்ளார்கள் சில கோஷ்டியினர் மட்டுமே இதை எதிர்த்தார்கள்.

துரையப்பா மேயரான பின் மக்கள் நிம்மதியாக தங்கள் வேலைகளைச் செய்தார்கள் தமிழ்க் காங்கிரசும் துரையப்பாவும் சேர்ந்ததினால் தமிழ்க் காங்கிரசின் செல்வாக்கு அதிகரிக்கிறது என்னும் மனப் பீதியினால் இம் மாநகரசபை கலைக்கப்பட்டது.

[illegible],
முன்னாள் உதவி மேயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது விஞ்ஞானம்

# டெலிவிஷன் புதிர்

— தி. விஜயேந்திரன் —

டெலிவிஷன் அமைப்பின் அடிப்படையான அம்சம் இரண்டு 'டியூப்'புகள். (பெரிய 'பல்ப்'போன்றவை). காட்சிகளை டெலிவிஷனில் காட்டுவதற்கு சினிமாப்படப்பிடிப்பைப்போல் ஒரு கமிராஇயங்கும். இந்த கமிராவில் உள்ள] 'டியூப்' காட்சிகளை பல லட்சம் புள்ளிகளாக கிரகித்து கொள்கிறது. வீடுகளில் உள்ள டெலிவிஷன் ஸெட் (ரிஸீவிங்செட்)டில் உள்ள டியூப், இ புள்ளிகளை ஒன்று சேர்த்து படமாக்கக் காட்டுகிறது ஆகவே இந்த வகையில் இந்த டியூப்புகள் இரட்டைப்பிறவிகள். இரண்டும் உணர்ச்சிமிக்கவை. ஒளி பட்டதும் உடனே கிரகித்து கொள்ளக்கூடியவை.

'டி.வி' காமிராவிலுள்ள டியூபினுள் இத்தகைய உணர்ச்சிமிக்க திரை ஒன்றுண்டு. இது பல்லாயிரக்கணக்கான புள்ளிகளால் ஆனது. இதன் மீது காட்சிகள் 'லென்ஸ்' மூலம் பாய்ச்சப்பட்டதும் ஒவ்வொரு புள்ளியும் தன் மீதுவிழும் ஒளிக்கு ஏற்பமின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. அதிக ஒளி விழுந்தால் அதிக மின்சாரம். இப்படி உற்பத்தியான மின்சாரத்தில் 'கதோட்ரே' என்ற ஒரு சக்தி செலுத்தப்படுகிறது. மின்சார துதுகள்களான 'எலக்ட்ரான்கள்' தான் இந்த காதாட்ரே இந்த 'எலக்ட்ரான்கள்' ஒளி அலைகள் டியூபிலுள்ள திரையின் மீது இடமிருந்து வலமாகச்செல்லும்படி செய்கிறார்கள். அடுத்தடுத்து ஒன்றின் கீழ் ஒன்றாக இந்த கோடுகள் தொடர்ந்து ஓடும். இப்படி திரையில்விழும்காட்சி எலக்ரான் கோடுகளால் பூர்த்தி பெறும். இதை ஸ்கானிங் (கூறுபோடுதல்) என்பர். ஒரு காட்சி 405 கோடுகளால் கூறுபோடப்படும். இதற்கு ஆகும் நேரம் 1/25 விஞடிகள். ஒரு காட்சியைஇப்படி கூறுபோட்டபின் அடுத்த காட்சியை கூறுபோட மறுபடி மேலிருந்து கோடு போடத்துவங்கும்.

(அடுத்த இதழில் முடியும்)

## வள்ளுவரின் நன்மொழிகள்

ஒரு நிலத்தின் தன்மையை அதில் முளைத்த முளை காட்டும். அதுபோல, குலத்தின் இயல்பை, அக்குலத்தில் பிறந்தவன்வாய்ச் சொல் காட்டும்.

ஃ

ஒருவனது முயற்சி, அவனுடைய செல்வத்தைவளர்க்கும். முயற்சியில்லாமல் சோம்பியிருத்தல் வறுமையை அடைவித்துவிடும்:

ஃ

அறத்தோடு பொருந்தி வாழ்வதனால் ஏற்படுவதே இன்பம். அல்லாத எல்லாம் இன்பம் அற்றவை. புகழும் அற்றவை.

ஃ

ஒருவன் தனது மனத்தினால் சினத்தை ஒரு நாளும் நினையாது இருப்பானாயின் தான் நினைத்த பேறுகளையெல்லாம் ஒருங்கே பெறுவான்:

ஃ

கல்வி அறிவள்ளவர்கள் தம் அறிவினால் பின்வரக்கூடியவற்றை அறிய வல்லவர் அறிவற்றவர் அவ்விதம் அதனை அறியமாட்டார்.

# வள்ளுவனும் கல்வியும்

— அ. கனகசூரியர் —

நாளை வள்ளுவர் தினமாகும். அதனையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது.

கல்வியைப் பற்றி வள்ளுவர் என்ன சொல்கிறார். 'கல்' என்றால் தோண்டுதல். தோண்டததோண்ட, கிணற்றிலே நீர் மிகுந்துகொண்டேயிருக்கும். அதுபோலத் தான், கற்கக் கற்க, அறிவு கூடிக் கொண்டேபோகும் இதைத்தான் வள்ளுவரும் "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"- என்று பேசுகிறார். கல்வியின் சிறப்பைக் கூற. இந்த ஒன்றே போதும்.

உலகிலே அழியாத செல்வம் என்று ஒன்று உளதாயின், அது கல்விச்செல்வமேயாகும். மற்றைய செல்வங்களெல்லாம்தேடும்போதும், பாதுகாக்கும் போதும், தொலையும் போதும் துன்பந்தருவன. கள்வரால், தீயால், இன்னும் பிறவற்றாலும் அழிந்துவிடும் தன்மையன. ஆனால், கல்விச்செல்வம் அத்தகைதன்று. இதனாற்றான், இதனைக் "கேடில் விழுச் செல்வம்" என்று வள்ளுவர் கூறுகிறார், இன்று நாகரிகத்தின்பேரால் மேனியைமினுக்கிக்கொண்டு இதன் மூலமதான் அழகு பிறக்கிறது என்று பவனிவருகின்றனர் பலர். பாவம்! அவர்களுக்கு அழகு என்றால் என்னவென்றே தெரியாது. "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சளழகும் அழகல்ல" பின்னே எதுதான் அழகு? "கல்வியழகே அழகு" என்கிறது நாலடியார். "கற்றார்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்று ஔவை கூறிச்சென்றார். அவனுக்கு, "யாதேனும் நாடாமால்; ஊராமால" என்று வள்ளுவரும் வாயூறுகின்றார்.

கல்வியை மணிவாசகர் பெரியகடலுக்கு ஒப்பிட்டு ஓரிடத்திற் கூறியுள்ளார். இன்னொரு புலவரும், "கல்வி கரையில; கற்பவர் நாட் சில" என்றார். "உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக் களரனையர் கல்லாதவர்" எனத் திருக்குறள் கூறுகின்றது. இதனிலிருந்தே, கல்வியின் சிறப்புத்தெற்றெனப் புலப்படும்.

எப்படி ஆராய்ந்து பார்த்தாலும், வாழ்க்கைக்கு உறுதுணையாக இருப்பது கல்வியே. வாழ்வு வளம் பெறக் கல்வி என்னும் நீர் பாய்ச்ச வேண்டும். அப்போது, 'அறிவு' என்னும் பயிர் வளரும். "அறிவுடையரெல்லாமுடையார்" ரல்லவா? எனவே, இதற்குக் கரணமாயுள்ள கல்வியைக், கசடறக் கற்க வேண்டும். கற்றபின் அதற்குத்தக்க ஒழுகவேண்டும். அப்போதுதான், அதனாற் பயனுண்டாகும்! இத்தகைய கல்விதன் பெருமை சொல்லவும் பெரிது. இதன் சிறப்பை நான் எடுத்துக் கூறுதல் ஆலமரத்தில் இலை பறித்தல் போன்றதாகும்.

# விவாத மேடை இல: 2

நமது பண்டைய மக்களும் தற்போதைய மக்களுட் சிலரும் சந்திரனைத் தெய்வமாக மதித்து வணங்கிவந்தனர். தற்போதும் வணங்கிக்கொண்டு வருகின்றனர். மக்கள் உலகம் முன்பு என்ன மாதிரிநெருப்பின்றி இறைச்சியைப் புசித்துவந்தனர் ன்பதும், இன்று என்னமாதிரி நெருப்புடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர் என்பதையும் நோக்கும்போது இடைப்பட்ட காலம் எந்த அளவு விஞ்ஞானத்தில் மேலோங்கியது என்பதைச் சொல்லாமலே விளங்க முடிகின்றது. சந்திரமண்டலத்தை அடைவதில் முழு நம்பிக்கையுண்டு. நம்பிக்கை கைகூடினால் அதனால் ஏற்படும் பல நன்மைகளும் தெரியவரும்.

வேலு. மகாலிங்கம்
பெரியபோரதீவு

ஃ ஃ ஃ

பறவையைக்கண்டு, விமானம் படைத்தான் விஞ்ஞானி; எதிரொலி கேட்டு வானொலி படைத்தான் விஞ்ஞானி. இத்தகைய அற்புதமான சாதனங்களைப் படைத்த விஞ்ஞானிகளின், இந்த இருபதாம் நூற்றாண்டின் புதிய முயற்சியாகிய சந்திர மண்டலப் பிரயாணத்தை நாம் வரவேற்கவேண்டும். உலகம் விஞ்ஞானத்தில் தான் இயங்குகிறது. அதே வேளையில் அமெரிக்கா, ரஷ்யா விஞ்ஞான நிபுணர்கள் கொண்டிருக்கும் புதிய புதிய அணுசக்தி ஆராய்ச்சிகளை நாம்வெறுக்கவேண்டியதில்லை. பதிலாகப் பாராட்ட வேண்டும். புதிய புதிய தகவல்தரும் அந்த முயற்சியில் ஒருவரப்பிரசாதம் என்பதில்தப்பில்லை.

அ. கனகசூரியர்
ஊரெழு மேற்கு

ஃ ஃ ஃ

ஆராய்ச்சியிலேஏற்பட்ட அறிவுக் களஞ்சியத்தின் மதியிலே சந்திர மண்டலப் பயணம் மிகமுக்கியமானது. விஞ்ஞான ரீதியிலே அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இருவல்லரசு நாடுகளும் ஏட்டிக்குப்போட்டியாக முன்னேறி வரும் இவ்வேளையிலே ஆயிரத்துதொளாயிரத்து அறுபத்துஆறும் ஆண்டு பெப்ரவரி லூனா ஒன்பது (லூனா 9) என்னும் செயற்கைக் கிரகத்தை சந்திர மண்டலத்திலே இறக்கி பெரும்புகழையீட்டினர் ரஷ்ய விஞ்ஞானிகள்.


இதனைக்கண்ணுற்ற அமெரிக்க விஞ்ஞானமேதைகளும் சுமார் நான்கு வருடத்திற்கிடையில் ஒரு மனிதக் குழுவை அங்கு(சந்திரமண்டலத்தில்) இறக்கத் திட்டமிட்டுள்ளனர். ஆராய்ச்சி என்பது ஒரு அறிவுக் களஞ்சியம் மட்டுமல்ல. மனிதனின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு இது அறவுப்பொக்கிஷம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பொன். திராவடமணி
தென் அல்வையூர்

ஃ ஃ ஃ

கவனிக்கவும்

விவாதமேடை இலக்கம்—2 இல்வாரத்துடன் பூர்த்தி பெறுகிறது. இலக்கம் இரண்டுக்குரிய "தீர்ப்பும்" மூன்றாவது விவாத மேடைக்குரிய விஷயமும்அடுத்தவாரம்இங்கு வெளியிடப்படும்.




அடுத்த
"மலரில்"
9—6—66

- துப்பறிவாளர் "ஷகான், வருகிறார்.
- இல்லங்களில் இரசாயனம்.
- பறவை வாழ்க்கை தரும் பாடம்.
- அறிவுள்ள மிருகம் எது?
- மற்றும் வழக்கமான — தொடர்கதை, கட்டுரைகள், பொதுமேடை, மூளைக்குவேலைஆகிய அம்சங்கள்.

துப்பறியும் தொடர் நவீனம்

# சோலை வனம்

— கே. ரி. இராசசிங்கம் —

அவன் எழுப்பியஓசைக்கு எதிரொலி போல "பியானோ" மீட்கப்படும் ஓசை இழைந்து வந்து அவன் செவிப்பறையில் முட்டி மோதிற்று. உண்மையில் அப் "பியானோ"விலிருந்து இனிமையான ஓசையே வெளிவந்தபோதிலும், இராமுவைப் பொறுத்தளவில் அப் "பியானோவும்" பயங்கரமான ஓசையைப் போன்றே இருந்தது.

பயங்கரமான "பியானோ"வின் மீட்டல் இசையோடு போட்டி போட்டுக்கொண்டு "எஸ்டேட்"டிலிருந்த ஏதோ மரத்திலிருந்த பறவை கிறீச்சிட்ட குரலில் அவனை கிலி பிடிக்கவைத்தது.

கதவைத் தட்டி சில நிமிடங்களாக யாருமே வராததைக் கண்டு பொறுமை இழந்தவனாக மீண்டும் ஒரு முறை பொருத்தப்பட்டிருந்த குமிழால் கதவில் தட்டி ஓசை எழுப்பினான்.

உடன்... "யாரது.. வாசலில்...?" என்று ஓர் கடூரமான குரலோசை உள்ளிருந்து ஒலித்தது! உள்ளிருந்து வெளிவந்த குரலில் கடுமையின் சாயல் இழைந்தது. அதைத் தொடர்ந்து ஒரே சீரான "பூட்ஸ்" ஒலியும் இராமுவின் காதில் விழுந்தது.

ஆனால் அந்தப் பயங்கரமான "பியானோ" ஓசை மட்டும் இடையில் தடைப்படாமல் மீட்டப்பட்டுக் கொண்டேயிருந்தது. அந்தப் "பியானோ" ஓசைக்கு தாளம் போல 'பூட்ஸ்' ஒலியின் சீரான நடை இலங்கிற்று.

பூட்ஸ் ஓசை எழுப்பிக் கொண்டே உள்ளுக்குள் இருந்த நபர் கதவைத் திறக்கும் பிரயத்தனத்தில் ஈடுபட்டவாறே "யாரது வெளியே...?" எனக் கேட்டார். (தொடரும்)

# வெந்தஎலும்பும் உயிர் பெறுமன்றோ!

— க. கனகலிங்கம் —

[நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை திருஞானசம்பந்தப் பெருமானது குருபூசைத்தினமாகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது]

இற்றைக்கு பல் ஆண்டுகளுக்கு முன்னே சைவம் வரட்சியுற்று சமணர் சூழலிலே அது வெந்தழிந்த பாலைவனமாயிற்று. அச்சூழ்நிலையிலே பாரதத்தாயின் மடியிலே பாரனைத்தும் சிவன்புகழ்பாடி சைவம் வளர்ச்சியுற பெருமழையொன்று சீர்காழிப் பகுதியிலே கொட்டிற்று. அப்பெருமழையே திருஞானசம்பந்த மூர்த்திநாயனாராவர். இவர் மூன்றும் வயதிலே ஞானப்பால் உட்கொண்டு தோடுடைய செவியன் என்னும் தேவாரப் பதிகம் பாடினார். அன்று முதல் திருஞானசம்பந்தர் எனப்பெயர்பெற்று இறைவனுருக்குஇனிய குமாரர் போலும் உரிமைத்தொண்டு பூண்டொழுகினார். சிவபிரானருளிய முத்துக் குடை, முத்துப் பந்தல், முத்துச் சின்னம், [illegible] சிவிகை, பொற்றாளம், பொற்கிளி என்பவற்றைப் பெற்று இறைவன்பால் தாம்கொண்டுள்ள பக்தியை வெளிப்படுத்தினர். பின் அப்பர் சுவாமிகளுடன் தோழமை பூண்டு இருவரும் பல தலங்களையும் பணிந்து பதிகம் பாடினர்.

மதுரையடைந்து திருமடத்தில் இருக்கும்கால் சமணர்கள் மடத்திற்கு தீ வைத்த பொழுது "செய்யனே திருவாலவாய்" என்ற பதிகத்தால் அத் தீ சென்று பாண்டியனை வெப்பு நோயாக வருந்தச் செய்தார். அவ் நோயினை சமணர் குருமார்கள் மாற்றாமல் போகவே திருநீறு கொண்டு மன்னன் நோய் தீர்த்தார். பின் சமணர்களுடன் அனல் வாதம், புனல் வாதம் புரிந்து சைவத்தின் உண்மையை உலகறியச் செய்தார். திருவோத்தூருக்குச் சென்று அங்குள்ள ஆண் பனைகளைப் பெண்பனைகளாக்கியும், திருமயிலாப்பூரில் சிவனேயச் செல்வரது மகளாகிய பூம்பாவை [illegible] ...ம்மையும் "மட்டிட்ட புன்னை" என்னும் பதிகத்தைப் பாடி மீண்டும் உயிர் பெறச் செய்தார். விஷத்தினால் இறந்த செட்டியை உயிர்ப்பித்தும், பாலைநிலத்தை நெய்தல் நிலமாகும்படி செய்தும், புத்த நந்தியுடைய தலையிலே இடியிடிக்கச் செய்தும் பல அற்புதங்களை செய்தார். இவர் பாடிய பதிகத் தொகை 16000. ஆனால் தற்போது இருப்பவை 384. இவர் முதலாம், இரண்டாம், மூன்றும் திருமுறைகளின் ஆசிரியர். இவர் சீர்காழிப் பகுதியிலே பிறந்தவராயினும் இலங்கையிலுள்ள திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மீது திருப்பதிகங்கள் பாடியுள்ளார்,

## அறிவுச் செல்வம்

1 கருங்கடல் என்னும் பெயர்வரக் காரணம் என்ன?

2 எந்தமிருகம் அதிகசத்தமிடும்?

3 மிகச் சிறியபறவைஎது?

4 ஆண்டில் சூரியன் பூமிக்கு அருகில் வரும் மாதம், திகதி என்ன?

5 ஒருயானை எவ்வளவுநீர் குடிக்கும்?

6 மிக வேகமாக வளரக்கூடிய தாவரமெது?

7 ஒரு மோட்டார்வண்டியில் எத்தனை பகுதிகள் உண்டு?

8 மிகவேகமாகப்பறக்கும் பறவை எது?

விடைகள்:

1 சடுதியில்புயலும், பனிப்புகாரும் உண்டாவதால். 2 சிங்கம், 3 ஊங்காரப் பறவை, 4 டிசம்பர் 23. 5 ஏறக்குறைய 15 கலன். 6 மூங்கில், 7 ஏறக்குறைய 15,000, 8 தாராவல்லீறு.

தொகுப்பு:
எம். எல். எம். இக்பால்,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடி, கனகரத்தினம் மகா வித்தியாலயங்கள் வெற்றி

## பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்ட மகாவித்தியாலயங்களுக்கிடையேயான 'ரக் அன் பீல்ட்' விளையாட்டுப் போட்டி பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் 28-ம், 29-ம் திகதிகளில் தொடர்ந்து பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 21 மகா வித்தியாலயங்கள் பங்கு பற்றிய இவ் விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கிடையேயான போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் பெண்களுக்கிடையேயான போட்டியில் கனகரத்தினம் மத்திய வித்தியாலயமும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

இ போட்டியில் பங்கு பற்றிய மகா வித்தியாலயங்களும் அவற்றின் புள்ளி விபரங்களும் பின்வருமாறு:

ஆண்களுக்கிடையேயான போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 87 புள்ளிகளும், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 62 புள்ளிகளும், சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரி 11 புள்ளிகளும், புங்குடுதீவு மகா வித்தியாலயம் 10 புள்ளிகளும், குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம் 9 புள்ளிகளும், உருத்திரபுரம் மகா வித்தியாலயம் 9 புள்ளிகளும், ஒஸ்மானியாக் கல்லூரி 8 புள்ளிகளும், மல்லாகம் இந்துக் கல்லூரி 7 புள்ளிகளும், வேலணை மத்திய மகா வித்தியாலயம் 7 புள்ளிகளும், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் 5 புள்ளிகளும், சிங்கள மகா வித்தியாலயம் 1 புள்ளியும், கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயம் 1 புள்ளியும் பெற்றன.

பெண்களுக்கிடையான போட்டியில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 46 புள்ளிகளும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 16 புள்ளிகளும், சந்திரபுரம் ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயம் 9 புள்ளிகளும், சாவகச்சேரி மஹாலயர் மகா வித்தியாலயம் 11 புள்ளிகளும், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் 8 புள்ளிகளும், நயினாதீவு மகா வித்தியாலயம் 3 புள்ளிசளும், நாவற்குளி மகா வித்தியாலயம் 3 புள்ளிகளும் பெற்றன.

சென்ற வருட விளையாட்டில் நிலைநாட்டப்பட்ட சாதனைகளில் அதிகமானவை இம்முறை முறியடிக்கப்பட்டு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

இப்போட்டியின் முடிவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் டாக்டர் திரு. ஜோன் சென். ஜோச் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர். விளையாட்டுத் தரத்தைப் பாராட்டிப் பேசிய அவர் சாம்பியன்களாக வந்த வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வெள்ளிக் கிண்ணங்களைப் பரிசாக வழங்கினார். சங்கக் காரியதரிசி திரு. எஸ். சீவரத்தினம் நன்றியுரை வழங்கினார்.

இ. போ. ச.

## பருத்தித்துறை கிளை புத்தாண்டு போட்டிகள்

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச் சபையின் புத்தாண்டு விழா மேற்படி நிலையத்தில் திரு. வன்னிக்கசேகரா தலைமையில் நடைபெற்றது. விளையாட்டுகளில் பரிசில்கள் பெற்றவர்கள் விபரம் வருமாறு:

விளையாட்டுப் போட்டிகளை பொறியல் பகுதி, நிர்வாகப் பகுதி என்று இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

சைக்கிள் ஓட்டப் போட்டி (23 மைல்): ம திருநாவுக்கரசு, ச வேலுப்பிள்ளை, வி குலசிங்கம்.

1500 யார் ஓட்டம்: இ நடராசா, சி மயில்வாகனம், அ பொ தர்மலிங்கம்.

100 யார் ஓட்டம்: சி மயில்வாகனம். ம திருநாவுக்கரசு, வி ஆதில்லைநாதன்.

பஸ் வண்டியைப் பின்பக்கமாகச் செலுத்துதல்: சி குமாரகுலசிங்கம்,

ரிக்கற் எழுதும் போட்டி: க சின்னத்தம்பி.

50 வயதுக்கு மேற்பட்டவர்களின் 100 யார் ஓட்டம்: எஸ் இராசையா, வி பொன்னம்பலம், கே சின்னப்பு.

''கிறீஸ்'' கம்பம் ஏறுதல்: பி எச் கெயிமரத்தின

கைப்பந்தாட்டப் போட்டி: பொறியல் பகுதி 2 ஆட்டம், நிர்வாகப் பகுதி 1 ஆட்டம்.

தாச்சிப் போட்டி: பொறியியல்.

போர்த்தேங்காய் உடைத்தல்: நிர்வாகப்பகுதி.

பார்வையாளர் ஓட்டம்: கே ஆர் வேலுப்பிள்ளை (மாவட்ட முகாமையாளர்)

திருமதி வன்னிக்கசேகரா பரிசில்களை வழங்கினார்.

## சிவயோக சமாச பிரவேச நினைவுவிழா

திருமலை, செவ்.

திருமலை சிவயோக சமாஜ ஆச்சிரம பிரவேச நினைவு விழா ஜூன் மாதம் 1-ம், 2-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

முதல்நாள் விழாவுக்கு திரு. த பகவதாஸ் தலைமை வகிப்பார். திரு. இ. சண்முகராசா, திரு. இ. வைத்திலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவர். இரண்டாம் நாள் விழாவுக்கு டாக்டர் கே. எஸ். சித்திரவேலு தலைமை வகிப்பார் திரு. பொ. சிவசேகரம், திரு. இ. கணபதிப்பிள்ளை ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

## டெடிகமை தேர்தல் ஆட்சேபமனு

### வெள்ளிக்கிழமை தீர்ப்பு

பம்பலப்பிட்டி, செவ்.

டெடிகமை தேர்தல் ஆட்சேபமனுமீதான வழக்கு விசாரணைகள் முடிவடைந்து விட்டன. இவ் வழக்கின் தீர்ப்பை எதிர்வரும் வெள்ளிக்கிழமைபிரதம நீதியரசர் திரு. எம். சி. சன்சோனி வழங்குவார். பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து திரு. எஸ்.

## நகைகள் களவு!

வேலணை, புதன்

வேலணையைச் சேர்ந்த சிவகுருநாதர் வீட்டில் கயிற்றின்மூலம் உள்ளே இறங்கி நகைகளையும் பணத்தையும் திருடியதாகக் கூறப்படுகிறது.

ஊர்காவற்றுறைப் பொலிசார் ஸ்தலத்துக்கு சென்று விசாரணை நடாத்தினர். களவுபோன பொருட்களோ திருடியவர்களோ இதுவரை எதுவுங் கண்டு பிடிக்கப்படவில்லை.

## காசநோய் தடுப்பு இயக்கம்

கொழும்பு, செவ்

காசநோய் தடுப்பு இயக்கம் மிகவும் நவீன தடுப்பு மருந்துகளை உபயோகிக்க தீர்மானித்துள்ளது. முதல் நடவடிக்கையாகவடமேற்கு மாகாணத்தில் இந்த இயக்கம் தனது தடுப்பு முயற்சிகளை மேற்கொள்ளும் தலைமைக் காரியாலயம குருநாகலையிலிருக்கும்.

காசநோய் தடுப்பு சம்பந்தமாக இந்தியாவில் பயிற்சி பெற்ற நான்கு உத்தியோகத்தர்கள் இந்தத் திட்டத்தில் கடமையாற்றுவார்கள். இவ்வித நவீன முறையில் அமைந்த காசநோய் தடுப்பு முறைகள் இரு வருடங்களின் பின் மற்ற மாகாணங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

இவ்வித தடுப்பு இயக்கம் இப்போது வட மாகாணத்தில தொழில்பட்டு வருகிறது

கிளிநொச்சி

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள்

கிளிநொச்சி, செவ்.

கிளிநொச்சி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது போட்டி அண்மையில் கிளிநொச்சி றெட்றிக்கோ பூந்தோட்ட மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் ஆனையிறவு உப்பள கோஷ்டியும் கிளிநொச்சி அரசாங்க சேவை பொழுது போக்கு கோஷ்டியும் கலந்து கொண்டன.

உப்பள கோஷ்டி முதல் ஆட்டத்தில் மொத்தம் 48 ஓட்டங்களும், இரண்டாவது ஆட்டத்தில் 41 ஓட்டங்களும் எடுத்தது. இதில் எதிர் கோஷ்டியைச் சேர்ந்த எஸ். வி. ஈ. பெர்ணண்டோ 28 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு பன்னிரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி பாராட்டுப் பெற்றுக் கொண்டார். உப்பள வீரர் எஸ். செபஸ்தியாம்பிள்ளை 10 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

அரசாங்க சேவைக் கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 154 ஓட்டங்கள் எடுத்தது. இக் கோஷ்டியைச் சேர்ந்த எல். பி. பெர்ணண்டோ 13 ஓட்டங்களும். எஸ் செபாரத்தினம் 36 ஓட்டங்களும், எஸ் வி ஈ. பெர்ணண்டோ 19 ஓட்டங்களும், டாக்டர் எல். சூசைப்பிள்ளை 34 ஓட்டங்களும், எஸ். மகேந்திரன் 32 ஓட்டங்களும் எடுத்தனர். எதிர் கோஷ்டி வீரர் எஸ் செபஸ்தியாம்பிள்ளை 31 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

### கரபந்தாட்ட போட்டி

பரந்தன் குமாரபுரம் சன சமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றுவரும் கழகங்களுக்கிடையேயான கரபந்தாட்ட போட்டியில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்துக்கும் பரந்தன்விளையாட்டுக் கழகத்துக்குமிடையே ஏற்பட்ட மோதலில் பரந்தன் கழகம் 15—7, 14—18. 15—11 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

# நாளை ஆரம்பமாகும் இங்கிலாந்து-மேற்கிந்திய கிரிக்கெட் டெஸ்ட்

## இங்கிலாந்தின் புதிய மாற்றம் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துமா?

— "அவதானி" —

நாளை வியாழக்கிழமை மான்செஸ்டரில் உள்ள ஒல்ட் டிறவ்போர்ட்டில் ஆரம்பமாகும். மேற்கிந்திய-இங்கிலாந்து முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி பலவிதத்திலும் கவரக்கூடியதாக இருக்குமென்று எதிர்பார்க்கலாம்.

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியில் இம்முறை செய்யப்பட்டிருக்கும் சில மாறுதல்கள் இக்கோஷ்டியின் கலைத்திறனைச் சிறிது அதிகரித்திருக்கிறது.

பலம் வாய்ந்த மேற்கிந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கு இங்கிலாந்துடன் இம்முறை ஏற்படும் மோதலில் ஓரளவு 'தளர்ச்சி' ஏற்படலாமென்று எதிர்பார்க்கவும் இடமுண்டு.

சிறந்த வீரர் ஸோபர்ஸ் தலைமையைக்கொண்டமேற்கிந்தியக் கோஷ்டியை பற்றி அதிகம் குறிப்பிடத் தேவையில்லை. ஆனால் இங்கிலாந்து கோஷ்டி பற்றி இம்முறை சிறித கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

### டி' ஒலிவேரா

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 31 வயதுள்ள கிரிக்கெட்வீரர் பேஸில்டி' ஒலிவேரா (கறுப்பர் இடம்பெற்றிருப்பதும் நொதாம்டன் ஷயாரைச் சேர்ந்த மில்பேர்ன் சேர்க்கப்பட்டிருப்பதும் ஒருவிதத்தில் வரவேற்கப்படவேண்டிய சிறந்த ஏற்பாடுகளாகும். இதன்மூலம் இங்கிலாந்து ஓரளவு புத்துணர்வு பெற்றுவிட்டதென்று கூறலாம்.

### கோஷ்டி விபரம்

இங்கிலாந்துக் கோஷ்டியில்: மைக்ஸ்மித் (காப்டன்) டேவிட்அலென், கென்பரிங்டன், டேவிட் பிறவுண், கொலின் கவுட்ரி, பேஸில் டி' ஒலிவேரா, கென்ஹிக்ஸ், ஜெவ ஜோன்ஸ், கொலின் மில்பேர்ன், ஜிம்பார்க்ஸ், எறிக்றஸல், பிறட்டிட்மஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

டி, ஒலிவேரா ஓர் 'ஆல் ரவுண்ட'ராகும். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியைப் பொறுத்தமட்டில், டி' ஒலிவேராவும், மில்பர்னும் புதியவர்கள் என்றுகூடச் சொல்லலாம். இவர்களிருவரும் பலமாக-விளாசித் தள்ளுபவர்கள் டி' ஒலிவேரா தென்னாபிரிக்காவில் 'ஒழிந்து மறைந்து' வாழ்ந்தவர். ஆரம்பத்தில் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளுக்கு மட்டுமே இவர் தலைகாட்டி வந்தார். இதற்குக் காரணம், இவர் வெள்ளையரல்லாததுதான்! ஆனால் இவரது புகழ் சிறிதுசிறிதபக அதிகரிக்கவே வெளியுலகிலும் இவரது பெயர் பரவத் தொடங்கிவிட்டது. இதற்கு றொடீஷியாவில் நடைபெற்ற காமன்வெல்த் சுற்றுப் பிரயாணம் வழிவகுத்தது என்று சொல்லலாம்.

மூன்றுவருட ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்ட இவர் கடந்த வருடத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியொன்றில் ஓட்டங்களை வெளுத்துவாங்கிதனது தகுதியைக் கிரிக்கெட் உலகுக்குக் காட்டிவிட்டார்.

### நாளை ஆரம்பம்

நாளை ஆரம்பமாகும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி டி' ஒலிவேராவுக்குப் புதிய அனுபவம். கறுப்பர் ஒருவர் இதில் இடம்பெற்றிருப்பதும்முதற் தடவைதான். அதனை அவர் எந்தவகையில் பயன்படுத்துவாரென்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் இங்கிலாந்துக்கோஷ்டி இம்முறை ஓரளவு பலம் வாய்ந்ததாகவே இருக்கின்றது. குறிப்பாகச் சொல்லப்போனல் டி' ஒலிவேராவின் திறமையான விளையாட்டு, இங்கிலாந்துக் கோஷ்டியை ஓரளவு பலப்படுத்துமெனறு எதிர்பார்க்கலாம்.

போன்: 7099

யாரும் இதுவரை
பார்த்திராத விதங்களில்
பெண்மணிகளின்
சட்டைகளும்
சிறுவர்களின்
சட்டைகளும்
தைத்து விற்கப்படுகின்றன.

றொலறம்ஸ்

46, பெரிய தெரு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரசபைக்கு மூவர் விசேஷ கமிஷன்

## நிர்வாகத்தை ஏற்று நடத்த நியமனம்

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்துவதற்காக மூன்று பேரைக்கொண்ட ஒரு விசேஷ கமிஷனை நியமிக்கும்படி ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் சிபார்சு செய்துள்ளார். மாநகரசபைசரித்திரத்தில் மூவர் கொண்ட விசேஷ கமிஷன் நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவை.

இத்தக் கமிஷனில் ஸ்தலஸ்தாபன கமிஷனர் திரு. டபிள்யு. எஸ் பெர்ணுண்டோ யாழ்ப்பாணம் ஸ்தலஸ்தாபன உதவி கமிஷனர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர், பொது மராமத்து பகுதி நிர்வாக எஞ்சினியர் திரு. என். நடேசன் ஆகியவர்களை நியமிக்கும்படி மந்திரி கேட்டுள்ளார்.

இம்மூவரையும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிர்வாகத்தை நடத்தும் விசேஷக்கமிஷனர்களாக நியமித்து கவர்னர் ஜெனரல் விசேஷ வர்த்தமானி மூலம் அறிவித்தபின்னர் அவர்கள். மாநகர சபையின் நிர்வாகத்தைக் கையேற்பார்கள் இந்த வர்த்தமானி இன்று இரவு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தற்போது மாநகர சபை ஆணையாளராகவிருக்கும் திரு. ஹட்சன் செல்வராசா தொடர்ந்து அப்பதவியிலேயே இருப்பார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிர்வாகம் பற்றி ஸ்தலஸ்தாபனக் கமிஷனர் திரு டபிள்யு எஸ் பெர்ணுண்டோ கடந்த வாரம் திடீரென விசாரணையொன்று நடத்தினுர். இந்த விசாரணையில் மாநகரசபை நிர்வாகத்தில் திறமையின்மையும் ஊழல்களும் நிலவுவதாக அவர்கண்டுபிடித்து அரசாங்கத்துக்கு அறிவித்விருந்தார் அதைத்தொடர்ந்து மாநாகர சபை கலைக்கப்பட்டது

யாழ் மாநகர சபையின் அடுத்த தேர்தல் நடைபெறும்வரை, இம்மூவர் கொண்ட விசேஷக் கமிஷனே யாழ்ப்பாணம் மாநகரசபை நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்தும்.

## நீதிமன்றத்தில் ஆட்சேபமனு தாக்கல்செய்வாராம்

### துரையப்பா அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபை திடீரென கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து தாம் சுப்ரீம் கோர்ட்டில் மனுவொன்றை ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு எதிராக தாக்கல் செய்யப் போவதாக யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னுள் மேயர் திரு. ஏ. ரி. துரையப்பா இன்று 'ஈழநாடு' நிருபரிடம் கூறினுர்.

பிரதமமந்திரியை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்படி அழைப்பதற்காக கொழும்பு வந்த அவர் இன்றும் கொழும்பிலேயே இருக்கின்ருர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை கலைக்கபபட்டதுசட்ட விரோத, ஒரு தலைப்பட்சமான நடவடிக்கையென்றும் அரசியல் நோக்கம் கொண்டது என்றும் திரு. துரையப்பா வர்ணித்தார். மாநகர சபையில் நிர்வாக ஊழல் இருப்பதாக நிரூபிக்கும்படி ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு தாம் சவால் விடுவதாக அவர் கூறினுர்.

### மந்திரியின் கருத்து

மாநகரசபை கலைக்கப்பட்டது சம்பந்தமாக ஸ்தலஸ்தாபன மந்திரியிடம் கேட்டபொழுது அவர் எதுவித அபிப்பிராயமும் கூறமறுத்து விட்டார். ஆனுல் ''மாநகரசபையைக் கலைக்கும்படி முடிவுசெய்தது அரசாங்கம், அதில் ஒரு மந்திரியாக நான் இருக்கிறேன்'' என்று மட்டும் அவர் கூறினுர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல சமூக ஸ்தாபனங்களும், பொதுமக்களும் மாநகர சபையின்நிர்வாகம் குறித்து விசாரணை செய்யும்படி அரசாங்கத்தை வற்புறுத்திய தின்பேரிலேயே திடீர் விசாரணைநடத்தப்பட்டதாகவும் அதன்மீது மாநகரசபை கலைக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.

## செயற்கை பட்டு, பருத்தி துணி யார் ஒன்றுக்கு ரூ. 1-96

### விலைக்கட்டுப்பாடு இன்று முதல் அமுலாகிறது

கொழும்பு, புதன்

எல்லா இறக்குமதிப் பொட்களுக்குமான விலைக் கட்டுப்பாடு இன்று முதல் அமுலுக்கு வருகின்றது.

செயற்கைப்பட்டு, செயற் பட்டின் துண்டுத்துணிகள் பருத்திப்புடவை, பருத்திப் புடவையின் துண்டுத்துணிகள் ஆகிய நான்கு ரகமான துணிகளின் ஆகக் கூடிய விலை யார்ஒன்றுக்கு ரூ 1-96 என அறிவிக்கப்படுகிறது.

மொத்த விற்பனை சில்லறை விற்பனை ஆகிய எல்லாவற்றுக்கும் விற்பனையாளர்கள் பற்றுச்சீட்டுக் கொடுக்கவேண்டும்.

வருகிற 14-ம் திகதிக்குள் தங்களிடமுள்ள கையிருப்புக்களின் அளவு பற்றி அரசாங்க ஏஜண்டிடம் தெரிவிக்க விற்பனையாளர்களுக்கு தவணை கொடுக்கப்பட்டுள்ளது

## மாஸேதுங்குக்கு எதிராக சீனப்பத்திரிகை கண்டனம்

பீகிங், மே31

சீனத்தலைவர் மா-ஸே-துங்குக்கு எதிராகமுதல் தடவையாக சீனப்பத்திரிகை ஒன்றில் கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அறிவாளிகளும், ராணுவ அதிகாரிகளும் தெரிவித்துள்ள கண்டனங்கள் பீகிங் தினசரிப் பத்திரிகைஒன்றில் முழுப்பக்கம்பிரசுரமாகியிருக்கிறது.

மாஸேதுங்கின் சிந்தனை சோஷலிஸவளர்ச்சிக்குபாதகமாய் இருப்பதாக அதன் ஆசிரியத்தலையங்கம் கூறியுள்ளது. அரசியல் ஆதிக்கப் போராட்டத்தில் சடுபட்டதன் காரணமாக இருவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதாயும், அவர்கள் மாஸேதுங்கின் கொள்கைகளை ஆட்சேபித்ததாயும் கூறப்படுகிறது.

## "3-ந் திகதி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை உட்பட சகல தந்திரங்களையும் தமிழரசுக் கட்சி கையாண்டு பார்த்திருக்கிறது. இவையாவும் தோல்வியடையவே, மந்திரி சபையிலுள்ள தங்கள் மந்திரி மூலம் இந்த அரசியல் தந்திரச் செயலைச் செய்திருக்கிறது'' என்று திரு துரையப்பா கூறினுர்.

''எனதுபதவிக் காலத்தில் திறமையின்மை, நிர்வாக ஊழல் இடம்பெற்றதற்கு ஒரு சம்பவத்தையாவது மந்திரி எடுத்துக்காட்டினுல் சபைகலைக்கப்பட்டதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன்'' என்றும் திரு. துரையப்பா சொன்னுர்.

## சுழிபுரம் கிராமசபைத் தேர்தல் முடிவுகள்

சுழிபுரம், திங்கள்

இன்று நடைபெற்ற சுழிபுரம் கிராம சபை தேர்தலில் ஏழு வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றி தெரிவுசெய்யப் பட்டனர். மிகுதி ஒன்பது வட்டாரங்களிலும் போட்டி மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றன. தற்போதைய தலைவர் உட்பட ஆறு அங்கத்தவர்கள் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர், போட்டி முடிவுகள் (வாக்கு எண்ணிக்கையுடன்) வருமாறு:-

1-ம் வட்டாரம்- ஏ. ஜே. எம். மயில்வாகனம் 361, எம். சின்னப்பு 202.

2-ம் வட்டாரம்- அ. தையல்பாகர் 250, கே, அரசரத்தினம் 14, எஸ், செல்லன் 11.

3-ம் வட்டாரம்- எஸ். நரசிங்கம் 207, எம். கந்தன் 94, எஸ். ராதாக்கிருஷ்ணன் 06.

4-ம் வட்டாரம்- க. குமாரசாமி (போட்டியில்லை),

5-ம் வட்டாரம்- ப. வயித்தி 165, கே. மாதன் 155, வி. சங்கரப்பிள்ளை 109.

6-ம் வட்டாரம்- பி. விசுவநாதன் (போட்டியில்லை).

7-ம் வட்டாரம்- சு. கந்தசுவாமி 194, மு. கந்தசாமி 60.

8-ம் வட்டாரம்- அ. நன்னித்தம்பி (போட்டியில்லை).

9-ம் வட்டாரம்- சி. நல்லையா (போட்டியில்லை).

10-ம் வட்டாரம்- எஸ். இராசையா 263, எம். அருணுசலம் 146.

11-ம வட்டாரம்- அ. நடராசா (போட்டியில்லை).

12-ம்வட்டாரம்- சு. தம்பி நயினுர் 279, த. பொன்னுத்துரை 217, வி, மகாலிங்கம் 93.

13-ம் வட்டாரம்- கா, ச. நாராயணபிள்ளை (போட்டியில்லை).

14-ம் வட்டாரம்- மி. பொன்னுச்சாமி (போட்டியில்லை).

15-ம் வட்டாரம்- எம், செல்லத்துரை 87, எஸ். கந்தையா 79, க. கணேசரத்தினம் 44.

16-ம் வட்டாரம்- ரி. தம்பித்துரை 308, மா. இராசையா 180, சு. துரைராசா 18.

## உடுப்பிட்டி எம். பி. அமெரிக்கா செல்வார்

கொழும்பு, வெள்ளி

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் இன்னும் சில நாட்களில் அமெரிக்கா செல்லவிருக்கிருர். ஹாவார்ட் பல்கலைக்கழகம் நடத்தும் கருத்தரங்கொன்றில் கலந்துகொள்வதற்காக இவர் அங்கு செல்லவிருக்கிருர். உலக ஸ்தாபனம் ஒன்றின் சட்ட வல்லுநர் இவரை குறிப்பிட்ட கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

---

யாழ்ப்பாணம், செவ்.

சமூகத்தொண்டன், உதயதாரகை ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராய் கடமையாற்றியவரும், கவிஞரும், எழுத்தாளரும், நல்லூர் சாதனுபாடசாலை தலைமையாரியராய் கடமையாற்றியவருமான திரு க. பே. முத்தையாவின் இரண்டாவது அமரதினம் இன்று மாலை நல்லூர் சாதனுபாடசாலையில் நடைபெறுகிறது. கருத்தரங்கு, கவியரங்கு நாடக அரங்கு ஆகியன இடம்பெறுகின்றன. கருத்தரங்குக்கு திரு. சா. செல்லையாவும், கவியரங்குக்கு திரு. சொக்கனும், நாடக அரங்குக்கு திரு. தேவனும் தலைமை வகிப்பார்கள்.

## முருகமூர்த்தி கோவில் உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

ஆனைக்கோட்டை சாவக்காட்டுக்கு அருகாமையிலுள்ள முருகமூர்த்தி கோவிலில் நாளை வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு இயந்திரஸ்தாபணமும், அபிஷேக, ஆராதனையும் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள் வரை நடைபெறும்.

## எவருமில்லை

காலி, செவ்வாய்

நாகொடை கிராமசபை அங்கத்தவர்கள் எவரும் சமூகமளிக்காதபடியால், தலைவர் தெரிவு பின்போடப் பட்டுள்ளது.

தலைவர் தெரிவுக்காககாலி ஸ்தலஸ்தாபன உதவிக் கமிஷனர் திரு. பேர்ஸி அபய[illegible] இக்கூட்டத்துக்கு [illegible]

## கல்வி இலாகாவுக்கு ஏற்படும் நஷ்டம்

மீரிகம, செவ்.

பொறுப்பற்ற சில ஆசிரியர்கள் அனுவசியமாக லீவு எடுப்பதால் வருடம் எழுபத்தைந்துலட்ச ரூபாய் கல்வி இலாகாவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று டனேவித்தமகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் மந்திரி திரு. ஐ.எம். ஆர். ஏ. இரியகொல்ல கூறினுர்.

150 ரூபாயிலிருந்து 750 ரூபாய் வரை சம்பளம் பெறும் இருபத்தையாயிரம் ஆசிரியர் நாள்தவருது பாடசாலைக்குச் செல்வதில்லையென்றும் கல்வி மந்திரி சொன்னுர்.

தனது அழைப்பையேற்று இவ் விழாவில் கலந்து கொள்ள வந்ததற்காக திருமதி சிவா ஒபயசேகரா கல்வி மந்திரிக்கு நன்றி தெரிவித்தார்.

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் செய்துவருவதாகவும் அவர் மேலும் கூறினுர்.

ஒருசில ஹிந்திப் படத் தயாரிப்பாளர்கள் மட்டுமே தங்கள் திரைப்பட இசைத் தட்டுக்களை ஒலிபரப்ப வேண்டாமென இலங்கை வானெலி நிலையத்திற்கு எழுதியுள்ளார்கள் என்றும் ஆனுல் எந்தவொரு தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளரும் தங்கள் திரைப்பட இசைத்தட்டுக்களை ஒலிபரப்பவேண்டாமெனஎழுதவில்லையென்றும் அந்த அதிகாரி மேலும் கூறினுர்.

## ஆட்சேபம்

தொண்டமானுறு, செவ்.

தொண்டமானுறு இந்து ஆங்கில பாடசாலையில் சமீபத்தில் நடைபெற்ற இடமாற்றத்தைக் கண்டித்து பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஓர் ஆட்சேப மகஜரை கல்வியதிகாரியிடம் சமர்ப்பித்துள்ளது

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 1ம் திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org